

தமிழரசு

சுதந்திரப் போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவா



தோற்றம் : 14-10-1884
மறைவு : 23-7-1925


# நாமக்கல் கவிஞர் நூற்றாண்டு நிறைவுச் சிறப்பிதழ்

















# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2019

விபவ - புரட்டாசி 31

மலர் : 19    16-10-1988    இதழ் : 8

அட்டை சொல்லும் செய்தி



—அண்மையில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தியும், அவர் துணைவியார் திருமதி சோனியாவும் தமிழ்நாட்டில் மூன்று நாட்கள் மேற்கொண்ட சுற்றுப்பயண விவரம் இங்கே சுருக்கித் தரப்படுகிறது.

# தமிழ்நாட்டில் பிரதமர் சுற்றுப்பயணம்

தமிழ்நாட்டில் நடைபெற்று முடிந்த அல்லது நடைபெற்றுக் கொண்டிருக்கிற பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளைப் பார்வையிடுவதற்காகவும்-புதிய திட்டங்களைத் துவக்கிவைப்பதற்காகவும் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் அவர்கள் தமிழ்நாட்டிற்கு வருகை தந்தார். அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளான அக்டோபர் 2ஆம் நாளன்று தொடங்கி மூன்று நாட்கள் சுற்றுப்பயணமாக அது அமைந்தது.

அண்ணா மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், காமராஜர் மாவட்டம், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் பிரதமர் சுற்றுப்பயணம் அமைந்தது.

2.10.88 அன்று காலை 11 மணியளவில், விமானப்படை விமானத்தில் மதுரையில் வந்திறங்கினார் இந்தியப்பிரதமர். பிரதமருடன் அவர் மனைவி திருமதி சோனியா அவர்களும் வந்திருந்தார்.

மதுரை விமான நிலையத்தில் மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி.அலெக்சாண்டர், நாடாளுமன்றத் துணைச் சபாநாயகர் திரு தம்பித்துரை, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு ஜி.கே.மூப்பனார் எம்.பி., மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு தேவராஜ் ஆகியோர் பிரதமரை அன்புடன் வரவேற்றார்கள்.

மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் திரு பிரபு, திரு அருணாசலம், மதுரை மாநகராட்சி ஆணையர் திரு அலாவுதீன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகளும் வரவேற்றார்கள்.

விமானத்திலிருந்து இறங்கிய பிரதமர் தம்மைக் காணவந்திருந்த மக்கள் கூட்டத்திடையே சென்று அளவளாவினார். பின்னர்தான் பிரமுகர்கள் வரவேற்பை ஏற்றுக் கொண்டார்.

## காந்தி கிராமம்

11.30 மணிக்கு அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் அண்ணா மாவட்டத்திலிருக்கும் காந்தி கிராமத்திற்குப் பிரதமர் வந்து சேர்ந்தார். காந்தி கிராமப் பல்கலைக்கழகத்தின் சார்பில் திண்டுக்கல்லில் பிரதமருக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

தேசிய ஒருமைப்பாட்டு முகாம் சார்பில் மாணவர்களால் உருவாக்கப்பட்டிருந்த கசிவுநீர்க் குட்டையைப் பிரதமர் திறந்து வைத்தார். காந்தி கிராமப் பல்கலைக் கழக வளாகத்தில் பிரதமரும் அவர் துணைவியாரும் மரக் கன்றுகள் நட்டார்கள்.

காந்தி கிராம உற்பத்திப்பொருள் கண்காட்சியைத் திறந்து வைத்த பிரதமர், ஏழை எளிய மக்கள் தொழில் செய்யக் கடனுதவியும் வழங்கினார். பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்ட பொதுக்கூட்டத்திலும் பங்கேற்று, அவர் அரிய உரை நிகழ்த்தினார்.

அப்போது அவர் —''காந்தியாரும் காமராசரும் வகுத்துத்தந்த சமூக, பொருளாதாரத் திட்டங்களைப் பின்பற்றிச் செயல்படுத்துவதன்மூலமே, புதிய தமிழகத்தையும், புதிய இந்தியாவையும் உருவாக்க முடியும்'' என்றார். மேதகு தமிழக ஆளுநரும் இவ்விழாவில் பேசினார்.

பிறகு அங்கிருந்து இராமேசுவரம் வந்து சேர்ந்தார், பிரதமர்.

அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலுக்கு வருகை தந்த பிரதமருக்கும், அவர் துணைவியாருக்கும் பூரணகும்ப மரியாதை அளிக்கப்பட்டது. இறை வணக்கத்திற்குப் பின், அங்கிருந்த தங்கப் பல்லக்கையும், வெள்ளி வாகனங்களையும பிரதமர் பார்வையிட்டார்.

நேரு சதுக்கத்தில் கூடி நின்ற மக்கள் வாழ்த்து முழக்கத்தோடு

பிரதமரை வரவேற்றார்கள். அதன்பின், கார்மூலம் காட்டுப் பிள்ளையார் கோயிலுக்கு வருகை தந்த பிரதமர், மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர் சங்க விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

பிறகு பாம்பன் ரோடு பாலம் வழியே பிரதமர் மண்டபம் வந்து சேர்ந்தார். அங்கு அவர் பாம்பன் பாலத்தைத் திறந்து வைத்து நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

## பாம்பன் பாலம்

மண்டபத்திற்கும் பாம்பனுக்கும் இடையே கட்டப்பட்டிருக்கும் பாலமான இது19•98கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டிருக்கிறது. இராமேசுவரம் தீவை நாட்டின் நிலப் பகுதியோடு இணைக்கக்கூடிய இப்பாலத்தின் நீளம் ஏழாயிரத்து ஐந்நூறு அடி. அதாவது 2.345கிலோ மீட்டர் நீளம்; 7.5 மீட்டர் அகலம். 1973ல், இந்தப் பாலத்திற்குத் திருமதி இந்திராகாந்தி அடிக்கல் நாட்டினார். கடல் மட்டத்திலிருந்து 80 அடி உயரத்தில் கட்டப்பட்டுள்ள இந்தப் பாலம்தான், இந்தியாவிலேயே கடலில் கட்டப்பட்டிருக்கும் நீளமான பாலமாகும்.

இதன் திறப்பு விழாவில் பேசிய மாண்புமிகு பிரதமர் ராஜீவ் காந்தி ''தமிழ்மொழியையும் அதன் பண்பாட்டையும் பாதுகாக்கும் பொறுப்பு இந்தியா முழுவதற்குமே உண்டு'' என்று குறிப்பிட்டார். 'அன்னை இந்திராகாந்தி பாலம்' என்று அப்பாலத்திற்குப் பெயர் சூட்டினார்.

மாண்புமிகு மத்திய போக்குவரத்துத் துறை இணையமைச்சர் திரு. ராஜேஷ்பைலட்டும் இவ்விழாவில் கலந்துகொண்டு பேசினார். சென்னை பெங்களூர், சென்னை-திண்டுக்கல், மதுரை, சேலம் கோவை-கொச்சி ரயில்பாதையில் மேலும் இரண்டு எக்ஸ்பிரஸ் ரயில் பாதைகள் அமைக்கும் திட்டம் இருப்பதாக அப்போது அவர் குறிப்பிட்டார்.

மறைந்த மன்னர், சண்முக ராஜேசுவர ரகுநாதசேதுபதியின் மனைவி திருமதி இந்திராணி அம்மையார், நெடுஞ்சாலைக்குச் சேதுபதிபெயரைச் சூட்டியமைக்கு மகிழ்ச்சி தெரிவித்து, பிரதமருக்குச் சால்வையும், அவர் துணைவயாருக்குப் பட்டுச் சேலையும் வழங்கினார்.


இவ்விழாவில் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திரு எம். எம.ராஜேந்திரன் கலந்து கொண்டார்.

பிறகு இராமநாதபுரம், விருதுநகர், உத்திரகோசமங்கை, முதுகுளத்தூர், பசும்பொன், கமுதி, அருப்புக்கோட்டை ஆகிய ஊர்களுக்கும் பிரதமர் சுற்றுப்பயணம் செய்தார். வழியெங்கும் மக்கள் உற்சாகத்தோடு வரவேற்றார்கள்.

அருப்புக்கோட்டை - சாத்தூர் சாலை சந்திப்பில், ஒரு கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் அமைந்துள்ள, ஒண்டிப்புலிகுடிநீர்த் திட்டத்தைப் பிரதமர் துவக்கி வைத்தார்.

முதுகுளத்தூரில், காந்தியார் சிலைக்குப் பிரதமர் மாலை யணிவித்தார்.

பசும்பொன்னுக்கு வருகைதந்த மாண்புமிகு பிரதமரும், அவர் துணைவியாரும் விடுதலைப் போராட்ட வீரராகவும், தலைசிறந்த தேசியவாதியாகவும் இருந்த மறைந்த முத்துராமலிங்கத்தேவர் சமாதிக்குச் சென்று மலர் வளையம் வைத்துவணங்கினர். அங்கு, அவரது அருமை பெருமைகள் பற்றிப் பேசினார். பார்வையாளர் புத்தகத்தில் அவர்கள் கையெழுத்திட்டார்கள்.



பிரதமரின் அடுத்த நாள் சுற்றுப் பயணம், துலுக்கப்பட்டியிலிருந்து தொடங்கியது.

சாத்தூருக்கு வந்த அவர், பேருந்து நிலையம் அருகே உள்ள காமராசர் சிலைக்கு மாலையணிவித்தார். வீதியின் இருபுறமும் எழுச்சிமயமாகத் திரண்டிருந்த மக்களைப் பார்த்த அவர், காரினின்றும் இறங்கி சுமார் இரண்டு பர்லாங்கிற்கு மேல் நகர வீதியில் நடந்தே சென்றார். மக்கள் பலர் கொடுத்த மனுக்களைத் தாமே நேரில் பெற்றுக்கொண்டார். மகிழ்வுற்ற மக்கள் அவருக்கு மாலைகளும், கதராடைகளும் அணிவித்து வாழ்த்தினார்கள். தெற்குரத வீதியில் உள்ள, முத்துராமலிங்கத் தேவர் சிலைக்குப் பிரதமர் மாலையணிவித்தார்.

வீரபாண்டியபுரம் அரிசனக் குடியிருப்புக்கு வந்தபிரதமர் அங்குள்ள மக்களின் குறைகேட்டறிந்தார். பிறகு மேட்டவலை, சின்னகாலன் பட்டி, சுந்தரராஜபுரம், வினம் பாடி வழியாகச் சிவகாசிக்கு வருகை தந்தார். நகர எல்லையிலேயே மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி ஜெயலட்சுமி அம்மாள், அவருக்கு மாலையணிவித்தார். சிவகாசி நகரவீதிகளில் திரண்டிருந்து வரவேற்ற மக்களை நோக்கி, தமக்குப் போடப்பட்ட ஆடைகளை வீசி அகமகிழ்ந்தார், பிரதமர்.

சிவகாசிபுரம் அரிசனக் குடியிருப்பில் இருந்த குடிசைகளுக்குள்ளும் போய், ஏழை மக்கள் நலம் விசாரித்தார் பிரதமர்.

ஸ்ரீவில்லிப்புத்தூரில் காமராசர் சிலைக்குப் பிரதமர் மாலையணிவித்தார். அருள்மிகு ஆண்டாள் திருக்கோயிலுக்குச் சென்ற அவர், பூரணகும்ப மரியாதையோடு வரவேற்கப்பட்டார்.

ராஜபாளையம் வந்தபோது, நேரு சிலைக்குப் பிரதமர் மாலையணிவித்தார்.


### தேர்தல் எப்போது?

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திற்கு வருகை தந்த பிரதமர், திருநெல்வேலியில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். அவர்கள் கேட்ட பல கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

''தமிழகத்தில் பொதுத்தேர்தல் எப்போது?'' என்பது அவற்றில் ஒரு கேள்வி.

''தேர்தல் கமிஷனும், மாநில ஆளுநரும் முடிவு செய்வதைப் பொறுத்தே தேர்தல் தேதி அமை





யும்'' என்று அதற்குப் பிரதமர் பதிலளித்தார்.

புளியங்குடி, கிருஷ்ணாபுரம், கடையநல்லூர், குற்றாலம் வழியாகத் தென்காசி வந்து சேர்ந்தார் பிரதமர். அங்கு நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதமர் ''சுதந்திரப் போராட்ட காலத்தில் வ.உ.சி.க்கு ஆயுள் தண்டனை விதித்த ஆஷ்துரையை மணியாச்சி ரயில் நிலையத்தில் சுட்டுக்கொன்றுவிட்டு, தானும் தற்கொலை செய்துகொண்டவர் வீர வாஞ்சிநாதன். இனி மணியாச்சி ரயில்நிலையம் அந்த வீரவாலிபரின் பெயராலேயே 'வாஞ்சிமணியாச்சி' என்றே அழைக்கப்படும்'' என்று தம உரையில் குறிப்பிட்டார்.

தமிழகத்தில் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில், பனைமரத்தொழில் சம்பந்தப்பட்ட ஆய்வு மையம் ஒன்று துவக்கப்படும் என்றும் அப்போது அவர் தெரிவித்தார்.

காயல்பட்டினத்திற்கு வருகை தந்த பிரதமர், முஸ்லீம் பெருமக்களால் அன்புடன் வரவேற்கப்பட்டார். அங்குள்ள முஸ்லீம் தர்காவுக்குச் சென்று அவர் தொழுகை நடத்தினார். நகரப் பஞ்சாயத்தில், நூற்றாண்டு நினைவாக அடிக்கல் நாட்டினார்.

புனித தோமையர், கிறிஸ்தவ மதத்தைப் பரப்பிய ஊரான வீர பாண்டியன் பட்டினத்திற்கு வருகை தந்த பிரதமர், கிறிஸ்தவ பெருமக்களால் உற்சாகமாக வரவேற்கப்பட்டார். கடற்கரையோரமாக அமைந்துள்ள புராதன மாதா கோயிலுக்குச் சென்று வழிபாடு நடத்தினார்.

கிருஷ்ணாபுரம் பெருமாள் கோயிலுக்குச்சென்றும் அவர்கள் இறை வழிபாடு நடத்தினார்கள். அங்குள்ள நேர்த்திமிக்க சிற்பங்களைக் கண்டுகளித்தார்கள்.

திருச்செந்தூருக்கு வந்த பிரதமரும், அவர் துணைவியாரும், முருகப்பெருமானின் அறுபடைவீடுகளில் ஒன்றான அருள்மிகு முருகன் திருக்கோயிலில் பூரணகும்ப மரியாதையோடு வரவேற்கப்பட்டார்கள். அங்கு அவர்கள் முருகக் கடவுளை வழிபட்டார்கள்.

ஆறுமுகநேரிக்கு வருகைதந்த பிரதமர் மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி. கோசல்ராம் சமாதிக்குச் சென்று மலர்வளையம் வைத்தார். சோமநாதன் சமேத சோமசுந்தரி கோயிலுக்குச் சென்று வழிபாடு நடத்தினார்.

**அணுமின் நிலையம் ஆபத்தா?**

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வந்த மாண்புமிகு பிரதமரை நாகர்கோயிலில் பத்திரிகையாளர்கள் பேட்டி கண்டார்கள்.

நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தைச் சேர்ந்த கூடங்குளத்தில், 1,000 மெகாவாட் மின் உற்பத்தித் திறனுள்ள அணுமின் நிலையம் அமைப்பதால் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் அச்சம் பற்றி அப்போது அவரிடம் கேட்கப்பட்டது.

''அணுமின்சார நிலையத்தால் சுற்றுச்சூழலுக்கு ஆபத்து ஏற்படும் என்று அஞ்சத் தேவையில்லை; அனல்மின்சார நிலையங்களாவது ரேடியோ கதிர்களைப் பரப்பும். அணுமின்சாரம் இத்தகைய கதிர் வீசல் ஏதும் இல்லாமல் இருக்கும். அணு உலையிலிருந்து கதிரியக்கப் பொருள் வெளியேறினால் கூட அதைத் தடுத்து நிறுத்திவிட முடியும்'' என்று பிரதமர் பதிலளித்தார்.

சுற்றுப்பயணத்தின் மூன்றாம் நாளான 4.10.88 அன்று, நாகர்கோயிலுக்கு வந்த பிரதமரும் அவர் துணைவியாரும் மாவட்ட மக்களைச் சந்தித்து விட்டு, இரணியல், மார்த்தாண்டம், தக்கலை வழியாக திருவனந்தபுரம் புறப்பட்டுச் சென்றார்கள்.

—நமது செய்தியாளர்

# எனது தந்தையார்

**திருமதி சரோஜினி வரதப்பன்**



என்னுடைய தந்தையாரின் பிறந்த தினத்தை நினைக்கும்போது அவரது நினைவுகள் மனதில் அலை மோதுகின்றன. தந்தையார் நூறு ஆண்டு வாழ்ந்து நாட்டிற்கும் நலம் நல்குவார் என்று நான் பெரிதும் எதிர்பார்த்தேன். எனது தாயார் மறைந்த பிறகு, அப்பாதான் எங்களுக்குத் தாயாகவும், தந்தையாகவும் இருந்து வந்தார். அவரது சதாபிஷேகத்தைச் சிறப்பாக கொண்டாடி மகிழ்ந்தோம். எங்கள் மூவருடைய சஷ்டியப்த பூர்த்தி தந்தையாரின் முன்னிலையில் நடைபெற நாங்கள் பாக்கியம் செய்திருந்தோம். எனது சகோதரனின் பேரன் மூலம் தந்தையாருக்குக் கனகாபிஷேகமும் செய்து மகிழந்தோம்.

அக்டோபர் மாதம் அவர்கள் பிறந்த தேதி ஒன்பது. வழக்கமாக அப்பாவின் நண்பர்கள் காலை 6 மணி முதலே வீட்டில் கூடி மாலை அணிவித்து, பிறந்த நாள் கேக் வெட்டி, பாராட்டுரை வழங்கி மகிழ்வர். அப்பா அவர்கள் பிறந்த நட்சத்திரத்தன்று தவறாது திருப்பதி சென்று வெங்கடேசப் பெருமாளைத் தர்சித்தே தீருவார். அதேபோல அன்று திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமாள், கபாலீஸ்வரர் கோயிலுக்கும் சென்று வழிபடுவார். இந்த ஆண்டு அப்பா இல்லாது எங்கள் இல்லம் வெறிச்சோடிப் போய்விட்டது.

சிறு வயதில் எங்கள் பள்ளிப் பருவத்தில் அப்பாவுடன் கூட்டங்களுக்குச் செல்வதில் எனக்கு மிகுந்த ஆசை. இளம் வயதிலேயே எங்களை, பாரதியார் பாடல்களைமுறையாகப் பயிற்சி பெறச்செய்து போட்டிகளிலும் கலந்துகொள்ளும் வாய்ப்பு அளித்தார். எனவே இளம் வயதிலேயே தேசியம் எங்கள் ரத்தத்தில் ஊறி விட்டது என்று கூறலாம்.

என் தகப்பனார் ஓர் உயர்ந்த விவசாயக் குடும்பத்தில் பிறந்து, மிக செல்லமாக வளர்ந்தவராயினும் காந்திஜியின் அறைகூவலும், தகப்பனாருடைய மாமா திரு. முத்துரங்க முதலியாரின் தேசியப் பணியும் என் தகப்பனாரை ஈர்த்துவிட்டது. உண்மையான காந்தீயவாதியாக, எளிய வாழ்க்கை, தூய கதராடை, தேசத்தொண்டு என்பதை தன் வாழ்க்கையின் லட்சியமாக்கிக் கொண்டார். நாளாவட்டத்தில் அவர் குடும்பத்தின் பொறுப்புக்களை என் தாயிடம் ஒப்படைத்து தன்னை நாட்டின் பொது சொத்தாக்கி விட்டார் என்று கூறலாம். அவர் வழக்கறிஞராக இருந்தபோதும் சரி, காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபட்ட நேரத்திலும், பின்பு அமைச்சராக இருந்தபோதும், ஓய்வு பெற்றிருந்த காலத்திலும் அப்பாவிடம் காலை முதல் இரவு வரை தொண்டர் கூட்டம் வந்துகொண்டே இருக்கும்.

*(பெரியவர் பக்தவத்சலம் அவர்களைப் பற்றி அவரது புதல்வி திருமதி சரோஜினி வரதப்பன் அவர்கள் எழுதிய கட்டுரை)*


காலையில் 5 மணிக்கு எழுந்து காலைக் கடன்களை முடித்து ஆறரை மணிக்கே பார்வையாளர்களைச் சந்திக்க, தயாராகிவிடுவார். எந்த விதமான ஆடம்பரமோ, ஆரவாரமோயின்றி, எல்லோரிடமும் சுமுகமாகப் பழகுவார். தன்னுடைய விரோதியானாலும், வீடு தேடி வந்தால் அவர்களை இன்முகத்துடன் வரவேற்று வேண்டிய உதவிகளைச் செய்வது அவரது பழக்கம். 'பகைவனுக்கருள்வாய்' என்ற பொன்மொழிக்கு அவர் ஒரு இலக்கணம்.

எங்கு போனாலும் குறித்த நேரத்தில் செல்லவேண்டும். சில சமயம், விழா ஏற்பாடு செய்பவர்கள் கூட தயாராக இல்லாது, அப்பா குறித்த நேரத்தில் சென்று அவர்களைப் பிரமிக்க வைத்துவிடுவார்.

கோட்டையில் அலுவலகப் பணிகளும் அவருக்கு முறையாக இருக்க வேண்டும். பள்ளிக்குப் போவது போல காலை 9 மணிக்கெல்லாம் புறப்பட்டுவிடுவார்.

ஒரு சமயம் அப்பா, நிதி அமைச்சராக இருந்தபோது, சட்டசபையில் நிதி பட்ஜெட் சமர்ப்பிக்க வேண்டிய தினம். அன்று அப்பாவிற்கு மூச்சுவிட நேரமில்லாது, பார்வையாளர்கள் எல்லோரையும் பார்த்து முடித்து, சாப்பிட வந்து உட்கார்ந்தார்கள். அன்று ஏதோ விசேஷ நாள், என் தாயார் வடை, பாயசம் தயாரித்து அப்பாவிற்கு அவசரமாக பரிமாறிக் கொண்டிருந்தார்கள். சாப்பிட்டுக் கொண்டே ஏதோ முக்கியமான பிரச்னைபற்றி வந்தவர்களிடம் பேசிக்கொண்டிருந்த என் தகப்பனார், பக்கத்தில் கிண்ணத்தில் வைத்திருந்த பாதாம்கீரை மோர் என்று நினைத்து, சாதத்தில் விட்டுக் கொண்டார்கள். என் தாயாருக்கு

## வன விலங்குகளைக் காப்போம்!



அக்டோபர் 2-ஆம் நாள் முதல்
வன உயிரின வாரம்

ஒரே ஆதங்கம். சாப்பிடக்கூட நேர மில்லை. அப்படி என்ன தேசத் தொண்டோ என்று அங்கலாய்த் தார்கள். அப்பா சிரித்துக் கொண்டு என் தாயாரிடம், 'ஏன் அலுத்துக் கொள்கிறாய். எல்லாம் வயிற்றில் போகப் போகிறது. பாயசமாகச் சாப்பிட்டால் என்ன? சாதத்தில் விட்டுச் சாப்பிட்டால் என்ன' என்று நையாண்டி செய்தார். அந்த அள விற்கு அப்பாவிற்கு எதையும் சமா ளித்துக் கொள்ளும் ஒரு பக்குவம் உண்டு.

பல கூட்டங்களுக்குப் போவார்கள். ஆனால் மிதமாக உண்பார்கள். போகும் இடங்களில் அளிக்கும் உணவுகளைத் தொட்டுப் பார்ப் பதுடன் சரி, அதனால்தான் அவர்கள் 90 வயது வாழ முடிந்தது. எந்தவிதமான சர்க்கரை வியா தியோ, ரத்த அழுத்தமோ, இருதயக் கோளாறோ எதுவுமே கிடையாது. கண் பார்வை இழந்த போதிலும், அதையும் பொருட்படுத்தாமல், மனோ பலத்துடன் தன் காரியங் களைக் கடைசிவரை செய்து வந் தார்கள். கோபம் என்பதே அப்பா விற்கு வராது. பொறுமைக்கு எடுத் துக்காட்டாக விளங்கினார்கள். தவறிக் கோபம் வந்தால், வாய் பேசாது மௌனியாகி விடுவார்கள். தன்னை வஞ்சித்தவர்களிடம் கூட துவேஷம் பாராட்ட மாட்டார்கள்.

காங்கிரஸ் ஸ்தாபனத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை, அபி மானம். மற்றவர்கள் அவர்களை மதித்தாலும், மதிக்காவிட்டாலும், தன் கடமைகளைச் செய்வதில் தவறவே மாட்டார்கள். காங்கிரஸ் ஆட்சி நலிவுற்றிருந்த காலத்திலும் சற்றும் தளராது, காங்கிரஸ் கூட்டங் களுக்குப் போவது, தொண்டர்களை உற்சாகப்படுத்துவது, இவைதான் அப்பாவிற்கு டானிக். பதவி இல்லா திருந்த போதும் அவர்கள் சற்றும் மனம் கலங்காது ஆற்றிய தொண்டு பாராட்டுதற்குரியது. கடைசி மூச்சு வரை காங்கிரஸ் ஸ்தாபனம், தேசத் தொண்டு, சமயத்தொண்டு இவை தான் அப்பாவிற்குப் பிடித்த மானவை.

கடைசிக் காலத்தில் பேரக் குழந் தைகளிடம் மிகுந்த அன்பு காட்டி னார்கள். அவர்களுடைய சுகமோ, துக்கமோ வெளிப்படையாக அவர்கள் காட்டவே மாட்டார்கள். ஆனால் பேரக் குழந்தைகளிடம் அவர்களையும் மீறி அன்பு பொழிந்து அவர்கள் ஆனந்தப்படு வது கண் கொள்ளாக் காட்சி.

தனக்குப்பின் அரசியல் வாழ்க்கை யில் ஒரு வாரிசு இருக்கவேண்டும் என்று அப்பா ரொம்பவும் விரும்பி னார்கள். அவர்கள் பதவியில் இருக் கும் வரை குடும்பத்தைச் சார்ந்த வர்கள் அரசியலுக்கு வருவதை அவர்கள் விரும்பவில்லை. ஆனால் தான் ஓய்வு பெற்றபின் தன் வாரிசு வரவேண்டும் என்பது அவர்களது ஆசை. அந்த ஆசை நிறைவேறாது போய் விடுமோ என்று எண்ணி இருந்த நேரம், அவர்கள் பேத்தி அரசியலில் இடம் பெற்றது அப்பா விற்கு மகிழ்ச்சி. அவர்கள் இருந்த குறுகிய காலத்தில் அரசியலில் நேர்மை, உண்மை, தியாகம் இவை களை எடுத்துச் சொல்லியுள் ளார்கள்.

அப்பழுக்கற்ற, நேர்மையான, கட்டுப்பாடு நிறைந்த, தியாக வாழ்க்கை அவர்களுடையது. பட் டம், பதவி, விளம்பரம் என்பது அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் எங்களுக்கு விட்டுச் சென்ற சொத்து அவர்களின் தூய வாழ்க்கை. எங்கு சென்றாலும் அவர்களின் பெயர் நிலைத்து நிற்கின்றது. கும்பல் சேர்ப்பது, கோஷம் போடுவது போன்ற அரசியல் மாயா ஜாலங்கள் எங்கள் தகப்பனாருக்குப் புரி யாத ஒன்று. ஆனால் சமூகப் பணி களில் எங்களை ஊக்குவித்து மக்க ளிடையே ஓர் சிறந்த இடத்தை அவர்கள் அடைந்துள்ளார்கள். கல்வி வளர்ச்சிக்கும், ஆலயங்கள் திருப்பணிக்கும், விவசாய, நீர்ப் பாசனத் திட்டங்கள், அணைகள், தமிழ்மொழி வளர்ச்சி என்று அவர்கள் கை வைக்காத பொருளே கிடையாது. சங்கீதத்திலும் அப்பா விற்கு ஈடுபாடு உண்டு. கலை உணர்ச்சி மிக்கவர்களாக, காந்தியக் கொள்கைகளைக் கடைப்பிடித்து Simple living and high thinking என்றபடி வாழ்ந்து காட்டிய பெரிய வர் அவர்.

கடைசிக் காலத்தில் அவர்களை விட்டு நான் வேலை நிமித்தம் டெல்லி சென்று திரும்பிவரும் சம யங்களை எண்ணிப்பார்க்கிறேன். பாசமே காட்டாது, இருந்த என் தகப்பனார், நான் டெல்லி போக காலை 6 மணிவிமானத்தைப்பிடிக்க நாலரை மணிக்கு எழுந்தால் அப்பா வும் எழுந்து உட்கார்ந்து என்னை வழி அனுப்பத் தயாராகிவிடுவார். அதேபோல நான் திரும்பிவர இரவே விமானம் தாமதமானால் நான் வீடு திரும்பும்வரை தூங்க மாட்டார். பணியாளர்களைப் பல முறை தொலைபேசி மூலம் விமா னம் வந்து விட்டதா என்று கேட்கச் சொல்லி, நான் வந்த உடன் வந்து விட்டாயா, சரி இனி தூங்குகிறேன் என்று படுத்துக்கொள்வார். இனி எனக்காகக் காத்திருக்க அந்தத் தூய ஆத்மா இல்லை என்ற ஏக்கம் என்னைப் பிடித்து ஆட்டுகின்றது.


அதேபோல் அப்பாவிற்கு வைத் தியம் செய்த மருத்துவர்களிடம் அப்பாவிற்கு மிகுந்த மரியாதை, நம்பிக்கை உண்டு. கடைசிவரை மருத்துவர்களும் என் தகப்பனா ரிடம் காட்டிய மரியாதை, பரிவு, எழுத்தில் எழுத முடியாத ஒன்று. அப்பா முதல் அமைச்சராக இருந்த போதும் சரி, அவர்கள் ஓய்வு பெற் றிருந்த காலத்திலும் மருத்துவர்கள் அவர்களிடம் ஒரே சீராக மரி யாதை காட்டியது மருத்துவப் பணிக்கே ஒரு சிறப்பாகும். கடைசி வரை என் தகப்பனாரின் உயிரைக் காப்பாற்ற அவர்கள் போராடியதை நாங்கள் என்றும் மறக்க முடியாது.

மாற்றுக் கட்சியைச் சார்ந்தவர் களும் அப்பாவிடம் காட்டிய மரி யாதை அவர்கள் மறைவின்போது நன்றாகப் புலனாகியது. இவ்வளவு உயர்ந்த ஒரு மகா மேதையின், ஓர் சிறந்த தேசத்தொண்டரின் மகளாகப் பிறந்ததை என் பாக்கிய மாகக் கருதுகிறேன். அவரின் பிறந்த தினத்தன்று அவரைப் பற்றி, சில கருத்துக்கள் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தமைக்கு நன்றி.

கடைசியாக ஒரு வேண்டுகோள். விளம்பரத்தை எதிர்பாராத என் தகப்பனாருக்கு நினைவுச் சின்னம் வைக்க மறைந்த முதல்வர் எம்.ஜி. ஆர். உண்மையாக விரும்பினார். அரசும் அதற்கு இணங்கி, சட்டசபை யில் நிதி அமைச்சர் அதை உறுதிப் படுத்தினார். கவர்னர் குரானா அவர்கள் கிண்டியில் இடம் ஒதுக்கி னார்கள். மறைந்த முதல்வருக்கு மற்றொரு மறைந்த முதல்வர் கொடுத்த வாக்குறுதியை இன்று அரசு நிறைவேற்ற வேண்டுகிறேன்.



தென் ஆப்பிரிக்க விடுதலை வீராங்கனை திருமதி மனோன்மணி நாயுடு, அவரது மகள் செல்வி சாந்தி நாயுடு ஆகியோர் மேதகு ஆளுநர் டாக்டர் அலெக்சாண்டர் அவர்களை ஆளுநர் மாளிகையில் சந்தித்தனர். (5-10-88)



தென் ஆப்பிரிக்க விடுதலை வீராங்கனை திருமதி மனோன்மணி நாயுடு அவர்களுக்கு 5-10-'88 அன்று சென்னை, காந்தி மண்டபத்தில் நடந்த அண்ணல் காந்தியடிகள் விழா-மகளிர் தினத்தில் மேதகு ஆளுநர் அவர்களின் துணைவியார் திருமதி அக்கம்ம அலெக்சாண்டர் அவர்கள் மாலை அணிவித்தார்.



திருமதி மனோன்மணி நாயுடு, அவரது மகள் செல்வி சாந்தி நாயுடு ஆகியோர் தலைமைச் செயலர் திரு எம்.எம். இராஜேந்திரன் அவர்களை, தலைமைச் செயலகத்தில் சந்தித்தனர். (6-10-88)


# தென் ஆப்பிரிக்க விடுதலை வீராங்கனை திருமதி மனோன்மணி நாயுடு அவர்களுக்கு வரவேற்பு

திருமதி மனோன்மணி நாயுடு, அவரது மகள் செல்வி சாந்தி நாயுடு ஆகியோர் ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் ஆ. பத்மநாபன் அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்தனர், (6-10-'88). செய்தி-சுற்றுலாத்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு செ, ராம்தாஸ், செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி ஆகியோர் உடன் உள்ளனர்.





தென் ஆப்பிரிக்க விடுதலை வீராங்கனை திருமதி மனோன்மணி நாயுடு அவர்கள் 4-10-'88 அன்று சென்னை வந்தபோது, செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி அவர்கள் வரவேற்றார்.




# உங்கள் வளர்ச்சிக்கு எங்கள் பாதுகாப்பான திட்டங்கள்

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான சிறந்த பல சேமிப்புத் திட்டங்களை வகுத்துள்ளது.

இன்றே வருவீர்—உங்கள் வாழ்க்கை வளம்பெற செய்திடுவீர்.


உங்கள் சேமிப்பிற்கு $\frac{1}{4}$% கூடுதல் வட்டி உண்டு.

- சேமிப்புத் திட்டம்
- நிரந்தர வைப்புத் திட்டம்.
- தொடர் வைப்புத் திட்டம்.
- ரொக்க சான்றிதழ்.
- சிறப்பு வைப்பீட்டுத் திட்டம்.

TNSC BANK

தமிழ்நாடு மாநிலத்
தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001.

*TNSC வங்கி—வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி*



## நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை வாழ்க்கைக் குறிப்பு

*19.10.1888* நாமக்கல் கவிஞர் வெ.ராமலிங்கம் பிள்ளை தோற்றம்.

*1907*—மெட்ரிகுலேஷன் வகுப்பில் தேர்ச்சி.

*1909*—பிஷப் ஹீபர் என்ற கல்லூரியில் படிப்பு. இண்டர்மீடியட் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்.

*1909*—முத்தம்மாளைத் திருமணம் செய்து கொண்டார்.

*1912*—டில்லியில் நடைபெற்ற ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் முடிசூட்டுவிழாவில் கலந்து கொண்டு, மன்னரது ஓவியத்தைக் கொடுத்து அவரிடமிருந்து தங்கப்பதக்கம் பெற்றார்.

*1914*—நாட்டுக்கும்மி என்ற நூறு தேசபக்திப் பாடல்களைப் பாடிக் காட்டி சேலம் ஸ்ரீ விஜயராகவாச்சாரியாரால் 'புலவர்' எனப் பாராட்டப்படல்.

திருச்சி காங்கிரஸ் கமிட்டிச் செயலாளராகப் பணியாற்றினார்.

மகாகவி பாரதியாரைச் சந்தித்துப் பாடல் ஒன்றைப் பாடிக் காட்டிப் புலவன் எனப் பாராட்டப்படல்.

*1920*—கல்கத்தா காங்கிரசுக்குச் சென்று காந்திஜியின் மிதவாதக் கொள்கைகளுக்கு ஆதரவளித்தல்.

*1921—30* நாமக்கல் காங்கிரஸ் வட்டச் செயலாளராகப் பணியாற்றினார்.

*1924*—முதல் மனைவி மரணமும் 2-ஆம் மனைவி சௌந்தரம்மாளுடன் திருமணமும்.

*1930*—'கத்தியின்றி ரத்தமின்றி' என்ற உப்புச் சத்தியாக்கிரக வழிநடைப் பாட்டைப் பாடிப் புகழ் பெறல்.

*1932*—சத்தியாக்கிரகப் போரில் கலந்து கொண்டு சிறைத் தண்டனை அடைதல்.

*1937—44* சேலம் ஜில்லா போர்டு மெம்பராகப் பணியாற்றுதல்.

*1942*—தமிழ்ப்பண்ணை ஏற்படுத்தப்பட்டது. அது நாமக்கல் கவிஞரின் நூல்களை முதன் முதலாக வெளியிட்டது.

*1945*—ஆகஸ்ட். சென்னைக் குடிமக்கள் வரவேற்பளித்துப்பணமுடிப்பு வழங்கினர்.

*1945*—ஆகஸ்ட் 10 சென்னை மாநகராட்சி மன்றம் வரவேற்பளித்துப் பணமுடிப்பு வழங்கியது.

*1949*—ஆகஸ்ட் 15. சென்னை அரசாங்கத்தால் ஆஸ்தான கவிஞராக நியமனம் பெற்றார்.


*1953*—டில்லி சாகித்திய அகாடமியின் உறுப்பினராக நியமிக்கப்பெற்றார்.

*1954*—அகாடமியின் நிர்வாகக்குழு உறுப்பினராக நியமனம் பெற்றார்.

*1956*—சென்னை அரசாங்கத்தால் எம்.எல்.சி.யாக நியமிக்கப் பெற்றார்.

*1971*—இந்திய அரசாங்கத்தின் 'பத்மபூஷண்' பட்டம் பெற்றார்.

***1972*— ஆகஸ்ட் 24 சென்னையில் காலமானார்.**



**[1953-ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி முதல் கூட்டத்தில் நாமக்கல் கவிஞரை அன்றைய குடியரசுத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் நேருவுக்கு அறிமுகப்படுத்தியபோது.**

# காந்தியக் கவிஞர்





சிலம்புச் செல்வர்
**டாக்டர் ம. பொ. சிவஞானம்**
தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழுத் தலைவர்

இந்தியதேசிய எழுச்சியானது இருவேறு சகாப்தங்களைக் கொண்டதாகும். ஒன்று, திலகர் சகாப்தம்; இன்னொன்று, காந்தியடிகள் சகாப்தம்; இவற்றோடு ஒவ்வொரு சகாப்தத்திலும் ஒவ்வொரு கவிஞரைத் தந்த பெருமை தமிழ் மொழிக்கு உண்டு.

திலகர் சகாப்தத்திலே, மகாகவி பாரதியாரைத் தந்தது; அதுபோல காந்தியடிகள் சகாப்தத்திலே நாமக்கல் வெ.இராமலிங்கம் பிள்ளையைத் தந்தது. காந்திய சகாப்தம் தோன்றிய பொழுது அதை வரவேற்று வாழ்த்திவிட்டுப் பாரதியார் மறைந்தார். அவர் பாடியுள்ள ''மகாத்மா காந்தி பஞ்சகம்'' இதற்குச் சான்றாகும். அந்த மகாகவியால் வரவேற்கப்பட்ட காந்தி சகாப்தத்தை வலுப்படுத்துவதற்கு, அவரது வாரிசாக நின்றுகவிதைகளைப் புனைந்தார் நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை.

காந்திய சாகப்தத்திற்கு, பாரதியார் புனைந்து வைத்துப் போன பாடல்கள் போதுமானவையாக இருக்கவில்லை. தேசிய ஒருமைப்பாட்டு உணர்ச்சியை வலுப்படுத்துவதற்கும், தேச விடுதலைக்கான ஆவேசத்தை வளப்படுத்துவதற்கும் பாரதியார் புனைந்தளித்த பாடல்கள் போதுமானவையாக இருந்தன. இதிலே இரண்டு அபிப்பிராயத்திற்கு இடமில்லை. ஆனால், காந்தி சகாப்தத்திலே, விடுதலை இயக்கத்தோடு சேர்ந்து கிளை இயக்கங்கள் பல தோன்றின. அவை கதர் வளர்ச்சி, தீண்டாமை ஒழிப்பு, அகிம்சைப் பிரசாரம் ஆகியவையாகும். இவை அத்தனைக்கும் பாடல்களைப் புனைந்தளிக்க காலதேவன் கவிஞர் இராமலிங்கம் பிள்ளையைத் தந்தான்.

பிள்ளையவர்கள், மக்கள் கதர் அணிய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திப் பல பாடல்களைப் புனைந்தார்.

1934ல் காந்தியடிகள் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தை விடுதலை இயக்கத்தோடு இணைத்த போது, அதற்கெனவும் பாடல்கள் புனைந்தளித்தார் நாமக்கல் கவிஞர்.

திலகர் சகாப்தத்திலே தோன்றிய பெருந்தலைவர்களிலே சிலர்

**திலகர் சகாப்தத்திலே தோன்றிய பெருந்தலைவர்களிலே சிலர் காந்தி சகாப்தத்திலே நம்மிடம் இருந்து விடைபெற்று அமரர் களாயினர். அவர்களைப் பற்றியெல்லாம் பாடல்கள் புனைந்தளிக்க ஒரு கவிஞர் தேவைப் பட்டார். அந்தத் தேவையை நிறைவு செய்த பெருமையும் நாமக்கல் கவிஞருக்கு உரியதாகும். அவர் திலகர் சகாப்தத்தையும், காந்தி சகாப்தத்தையும் பிணைக்கும் பாலம் போன்றவர்.**

காந்தி சகாப்தத்திலே நம்மிடமிருந்து விடைபெற்று அமரர்களாயினர். அவர்களைப் பற்றியெல்லாம் பாடல்கள் புனைந்தளிக்க ஒரு கவிஞர் தேவைப்பட்டார். அந்தத் தேவையை நிறைவு செய்த பெருமையும் நாமக்கல் கவிஞருக்கு உரியதாகும். அவர் திலகர் சகாப்தத்தையும் காந்தி சகாப்தத்தையும் பிணைக்கும் பாலம் போன்றவர்.

சென்னை மாவட்ட காங்கிரஸ் குழுவின் செயலாளர் பொறுப்பை தொடர்ந்து 9 ஆண்டுக்காலம் நான் ஏற்றிருந்தபோது, எனது வேண்டுகோளின் மீது எண்ணற்ற பாடல்களை கவிஞர் இராமலிங்கம் பிள்ளை இயற்றித் தந்தார்.

பாரதியார் புகழ் பரப்பும் பணியைச் சென்னை மாவட்ட காங்கிரஸ் குழுவின் சார்பில் நான் மேற்கொண்டபோது எனது வேண்டுகோளின்படி, அந்த மகா கவியின் மீது பாடல்கள் புனைந்தளித்தார். ''படித்தறியா மிக ஏழைக் கிழவனேனும்'' என்று தொடங்கும் பாடலானது பாரதியின் தரத்தையும் திறத்தையும் அளந்து காட்ட வல்லதாகும்.

அதுபோல, கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனாரின் புகழ்பரப்ப நான் திட்டமிட்டு முயன்றபோது, அந்த மாவீரர் மீதும் பாடல்கள் புனைந்தளித்தார்.

''மடமையதோ, பிறநாட்டார் மயக்கந்தானோ?'' என்ற தொடக்கத்தைக் கொண்ட வ.உ.சி.பற்றிய பாடற் தொகுப்பானது அவரது புகழைப் பரப்ப எனக்குப் பெரிதும் பயன்பட்டது.

மாவீரன் சுபாஷ் சந்திர போஸ், ''காந்தி வழி பழசு'' என்று பழித்துப் பேசியபோது, அதற்குப் பதிலளித்து, பாடல்கள் புனைந்தளித்த நாமக்கல் கவிஞரிடம் நான் அடைக்கலம் புகுந்தேன்.

அப்போதும், ''காந்தி வழி பழசா?'' என்று தாமே வினா எழுப்பி, அதற்கு விடையளிக்கும் வகையிலே பல பாடல்கள் புனைந்தளித்தார். அவற்றுள் ''பெற்றெடுத்த தாய்மிகவும் பழசாய்ப் போனாள்'' என்றும், ''சந்திரனும் சூரியனும் பழசாய்ப்



# நாமக்கல் கவிஞரின் கடைசிக் கவிதை!

**நாமக்கல் கவிஞர் அவர்கள் எழுதிய கடைசிக் கவிதை இது; ''தமிழரசு'' 16-8-1972 சுதந்திர தின வெள்ளி விழா மலரில் வெளியிடப்பட்டது. கவிஞர் தம் கைப்பட எழுதிய இந்தக் கவிதையில், அண்ணல் காந்தியடிகளை மறக்கவில்லை.**

அடிமை வாழ்வை நீக்கி நாம் அரசாள நாள் இது
அன்னியர்க்கு அஞ்சி வாழ்ந்த அவதி விட்ட நாள் இது.
கடமையோடு கண்ணியம் கட்டுப்பாடு மூன்றையும்
கண்ணைப் போலக் காப்பமென்று கையடித்த நாள் இது
விடுதலை நாள் கொண்டாடும் வெள்ளிவிழா நாளிதில்
வியப்பு மிக்க சாந்த சத்திய விரதம் பூண்ட வேள்வியில்
கடுமையான தவமியற்றிக் கட்டவிழ்த்து விட்ட நம்
காந்தியண்ணல் நினைவுகொண்டு கைகுவித்து வணங்கு-
-வோம்.

வெ. இராமலிங்கம்

போனார்'' என்றும் தொடங்கும் இருவேறு பாடல்கள் நேதாஜியின் வாதத்தை வெல்வதற்குப் பயன் பட்டன.

கான்பூரில் இந்து-முஸ்லீம் கலவரம் நிகழ்ந்தபோது, மத வெறியர்களால் இஸ்லாமியரின் வீடு ஒன்று கொளுத்தப்பட்டது. அதிலே மேல் மாடியில் சிக்கித் தவித்த இஸ்லாமியப்பெண்மணியைக் காக்க முயன்ற கணேஷ் சங்கர வித்யார்த்தீ என்னும் வழக்கறிஞர் தீக்கிரையானார்.

அந்தத் தியாகியின் சிலை திறப்பு விழாவிலே காந்தியடிகள் நிகழ்த்திய சொற்பொழிவு என் மனத்தைப் பெரிதும் உலுக்கியது. செய்தித்தாள்களில் வெளியான அந்தச் சொற்பொழிவின் துணுக்கைக் கவிஞருக்கு அனுப்பி அதை கவிதையாக்கித் தருமாறு வேண்டினேன். நான் கேட்டது ஒரு கவிதைதான் என்றாலும், நாமக்கல் கவிஞர் பல கவிதைகளைப் புனைந்தார்.

''குத்தீட்டி ஒரு புறத்தில் குத்தவேண்டும்'' என்று தொடங்கும் பாடலைக் கொண்ட கவிதைத் தொகுப்பு, இன்று படித்தாலும், பிறர் படிக்கக் கேட்டாலும் நெஞ்சுருகும்.

மகாகவி பாரதியார் வாழ்ந்த காலத்திலே இந்திய தேசிய காங்கிரசானது நாடு தழுவிய முறையிலே போராட்டம் எதையும் தொடங்கவில்லை. அது தொடங்கியது 1930ல்தான், அதன் பெயர், உப்பு சத்தியாக்கிரகம், அப்போது, ''கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது, சத்தியத்தின் நித்தியத்தைநம்பும் யாரும்சேருவீர்'' என்று தொடங்கும் செய்யுளைக் கொண்ட பாடல் தொகுப்பைப் புனைந்து உப்பு சத்தியாக்கிரகத்திற்கு உயிரூட்டினார்.

''தமிழனென்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா'' என்றும் ''தமிழன் என்றொரு இனம் உண்டு, தனியே அவற்கொரு குணம் உண்டு,'' என்றும் பாடல்கள் புனைந்தளித்த பெருமையும் நாமக்கல் கவிஞருக்கு உண்டு.


மகாகவி பாரதியார், குமரி முதல் இமயம் வரை பரந்து கிடக்கும் தாய் நாட்டின் மீதான பற்றையும், குமரிமுதல் வேங்கடம் வரை விரிந்து கிடக்கும் தாய் மாநிலத்திலே வழங்கும் தமிழ் மொழியின் மீதான பற்றையும் பிணைத்து வைத்து விட்டுப் போனார். அந்தப் பிணைப்பை வலுப்படுத்திய பெருமை நாமக்கல் கவிஞருக்கு உண்டு.

# சத்தியமூர்த்திக்கு வரவேற்பு

நாமக்கல் கவிஞர்
வெ. இராமலிங்கம்பிள்ளை







நித்திய அறங்கள் நாட்டில் நிலைத்திட உலகம் வாழ
உத்தமன் காந்தி காட்டும் ஒருவழி ஒன்றே உண்டு;
சத்திய சாந்த நோன்பின் தவச்சிறை யிருந்து வந்தாய்
சத்திய மூர்த்தி எங்கள் தலைவனே! வருக! ஐயா!

உடல்நலம் குறைந்தி ருந்தும் ஒருசிறு தயக்க மின்றிக்
கடன்என ஓடி அண்ணல் காந்தியின் ஆணை தாங்கித்
திடமுடன் தேச சேவை தீரர்கள் இனத்தைச் சேர்ந்தே
இடரிடைக் காத்தாய் பெற்ற இந்தியத் தாயின் மானம்!

ஏழைகள் துயரம் போக எளியவர் களைப்பு நீங்கப்
பாழ்பட உலகை வாட்டும் பகைமைகள் குறைய வென்றே
வாழிய காந்தி சாந்த வாய்மையின் வழியில் நின்று
ஊழியம் செய்யு முங்கள் உதவியை உலகம் போற்றும்

தீனரை வதைத்து வாட்டித் தின்றுடல் சுகித்து வாழும்
மானமில் லாத வாழ்க்கை மலிந்த(து) உலகில்; மற்ற
ஞானநல் வழியில் செல்ல நடத்திடும் காந்தி சாந்தச்
சேனையில் சேர்ந்த பேரைச் செகமெலாம் சிறப்புச் செய்யும்.

தஞ்சம்வந் தவரை நம்பித் தன்னர சிழந்து நொந்து
பஞ்சமும் பிணியும் வாட்டப் பலதுயர் பட்டா ளேனும்
எஞ்சிய 'சாந்தி'ஞானம் இன்னமும் குறைவி லாத
வஞ்சியாம் பார தத்தாய் வாழ்த்துவள் வாரித் தூக்கி!


பணத்தினை இழந்திட் டாலும் பலத்தினிற் குறைந்திட் டாலும்
குணத்தினிற் குறையக் கூசும் குலத்தினிற் பிறந்தோ மன்றோ?
கணத்தோடும் சிறையில் நொந்தும் கண்ணியம் குறைந்தி டாத
மணத்தொடும் வருவீர் தம்மை மாநிலம் மறவா தென்றும்.

வள்ளுவன் குறளும் வேத வடமொழி வகுத்த யாவும்
தள்ளரும் 'சாந்தி' என்ற தனிப்பதக் கருத்தே யாகும்
கள்ளமில் லாம லெண்ணின் காந்திசொல் அதுவே; காண்போம்
என்னரும் அதுவே யாகும் இந்திய நாக ரீகம்!

வருகவே சத்திய மூர்த்தி! வாழ்கஉன் இனத்தோ ரெல்லாம்
பெருகிநம் சாந்தி சேனை பெற்றதாய் நாட்டை மீட்கும்
அருகிலே அடையும் சொந்த அரசினை அழைத்துக் கொள்ளத்
தருகஉன் திறமை முற்றும் தமிழகம் பெருமை கொள்ளும்!

---

*தீரர் சத்தியமூர்த்தி 1942 போராட்டத்தின் போது சிறைப்பட்டு, பின்னர் விடுதலை பெற்று வெளிவந்த போது அவரை வரவேற்றுப் பாடியது.*



# அன்னை நாட்டின் அரசவைக் கவிஞர்

**1949**-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15-ஆம் நாள் இந்தியத் துணைக் கண்டத்திற்கே ஒரு நன்னாள்; பொன்னாள்; இன்பத் திருநாள். சுதந்திரத் திருநாள். நாடெங்கும் கோலாகலமாகக் கொண்டாடப் பட்டது. அதற்கு முந்திய நாளே அரசியலார் நாட்டு மொழிப் புலவர்களுக்குப் பரிசில்கள் அளித்துப் பாராட்டினர்.

சென்னையின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கத்தக்க சிறப்பு விழா ஒன்று அன்று ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது. அன்றுதான் நம் கவிஞருக்கு 'ஆஸ்தானக் கவிஞர்' என்னும் அரிய பட்டம் அரசியலாரால் வழங்கப்பட்டது. மண்டபத்தில் எள் விழுவதற்குக்கூட இடமில்லை. வெள்ளம்போல் திரண்டு மக்கள் விழாவினைக் காண வந்தார்கள்.

மக்களின் பலத்த கைதட்டுலுக்கும் ஆரவாரத்துக்கும் இடையே கல்வி அமைச்சர் பொன் பதக்கத்தை எடுத்துக் கொடுக்க, அதைக் கவர்னர் கவிஞருக்கு அளித்தார். பொன்னாடையொன்றும் போர்த்தி அரசாங்கம் கவிஞரைச் சிறப்பித்தது. அன்று கவிஞர் அவர்கள் கூறிய நன்றியுரை இன்னும் தமிழ் மக்கள் உள்ளத்தில் பசுமையோடிக் கொண்டிருக்கிறது.

''எனக்கு இதற்குரிய தகுதி பெரியதன்று; பெரிய பெரிய புலவர்களுக்குத் தரவேண்டிய அரிய பதவி; ஆகையால் பிற புலவர் பெருமக்களின் சார்பிலேயே நின்று இதனை நான் ஏற்றுக் கொள்கிறேன்'' என்று கூறினார். ''என்னே இவர்தம் பணிவு என்னே இவர் தம் புலமை'' என்று அனைவரும் பாராட்டுவாராயினர்.

அரசவைக் கவிஞர் என்ற பட்டத்தையும், ஆண்டுதோறும் ஓர் ஆயிரம் ரூபாய் பரிசுத் தொகையையும், கவிஞருக்கு அளிக்க வேண்டுமென்ற யோசனையை வெளியிட்ட பெருமை திரு கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு உரியதாகும். அதைச் செயல் முறையில் கொண்டு வந்த பெருமை அவ்வமயம் சென்னை மாநில முதலமைச்சராயிருந்த திரு ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரைச் சேரும்.

நன்றி: ''நாமக்கல் கவிஞர் பாடல்கள்'' என்னும் நூலில் புலவர் தணிகை உலகநாதன்

**''திலகர் விதைத்த விதை பாரதியாக முளைத்தது.**
**காந்தி தூவிய விதை நாமக்கல் கவிஞராகத் தோன்றியது.**

**—மூதறிஞர் ராஜாஜி.**



நான் அறிந்த முதல் மனிதன்

# சுப்பிரமணிய சிவா

நாமக்கல் கவிஞர்



சிதம்பரம் பிள்ளையவர்களுடைய அருமை பெருமைகளைப் பற்றி அலுப்பில்லாமல் அடிக்கடி பேசி ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்த நானறிந்த முதல் மனிதன் காலஞ்சென்ற சுப்ரமண்ய சிவா அவர்கள்.

சிவா அவர்கள் சிதம்பரம் பிள்ளையின் அந்தரங்கங்களையெல்லாம் நன்றாக அறிந்தவர். சிதம்பரம் பிள்ளையவர்களுடைய உண்மையான வரலாறுகளைத் தெரிந்திருந்தவர் சிவாதான். பிள்ளையவர்களுடைய சரித்திரத்தைத் தாமே எழுதப் போவதாகச் சிவா அவர்கள் சேலத்தில் என்னிடம் சொன்னார். அதற்குச் சில பாட்டுகளையும், அதை அச்சேற்ற வேண்டிய அனுகூலங்களையும் நான் செய்யவேண்டும் என்று சிவா என்னைக் கோரியிருந்தார். அது கைகூடுமுன் அவர் காலமாகி விட்டார்.



சிவாவின் சிம்ம கர்ஜனை போன்ற பிரசங்கங்களில், சிதம்பரம் பிள்ளையவர்களுடைய தேச பக்தியைப் பற்றியும் தியாகங்களைப் பற்றியும் அவர் உள்ளம் உருகிக் கண்ணீர் ததும்பப் பேசிய கட்டுரைகள் இன்னும் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

சிவாவின் மூச்சுப் போகிற வரையில் சிதம்பரம் பிள்ளையின் சிறப்புகளைப் பாடிக்கொண்டே பல ஊர்களிலும் அலைந்து திரிந்து கடைசியாக சேலம் ஜில்லாவிலுள்ள பாப்பாரப்பட்டியில் பரகதியடைந்தார்.

பாப்பாரப்பட்டியில் பாரதமாதாவின் கோவில் கட்ட சிவா அவர்கள் செய்த முயற்சிகளில் அந்த ஆலயத்தில் பல தேசபக்தர்களின் சிலைகளைப் பிரதிஷ்டை செய்ய நினைத்திருந்ததையும், அந்தத் தேச பக்தர்களுக்குள் சிதம்பரம்பிள்ளை முதல் ஸ்தானம் பெற்றிருந்தார் என்பதையும் நான் அறிவேன்.

பாப்பாரப்பட்டிக்கு நான் ஒரு முறை போயிருந்தபோது, அங்கே சுப்ரமண்ய சிவா பாரதமாதா கோவிலைக் கட்டக் குறிப்பிட்டிருந்த இடத்தையும், அந்தக் கோயிலைக் கட்டி முடிக்கவேண்டிய எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு, அதற்காக வாக்களித்திருந்த அன்பர்களையும் கண்டேன்.

பாரதமாதா கோயிலுக்காகச் சிவா வகுத்திருந்த திட்டங்களையும், அதில் சிதம்பரம் பிள்ளையவர்களுக்கு எவ்வளவு சிறந்த பீடம் கொடுக்கப்பட்டிருந்தது என்பதையும் அறிந்தேன். அந்த முயற்சி அவரோடு முடிந்தது.

நன்றி: "கப்பலோட்டிய தமிழன்" முன்னுரையிலிருந்து—

**டி.வி.எஸ். மணி**

# மக்கள் தலைவர்

**மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர்**
**திரு ஆர். வெங்கட்ராமன்**

நேருவுக்குப் பின்னர் இந்தியாவில் குழப்பம் மிகுந்து, ஜனநாயகம் அழிந்துவிடும் என்ற ஒரு கருத்து உலகின் பல பாகங்களிலும் பரவியிருந்தது.

இந்தியாவின் நெருங்கிய நண்பர்கள் எனக் கருதப்படும் தலைவர்களிடம்கூட இந்தச் சந்தேகம் இருந்தது. அந்தச் சந்தேகத்தையெல்லாம் போக்கி, நெருக்கடி நேரத்திலும் சிதறாமல், தளராமல் எழுந்து நிற்கும் சக்தி வாய்ந்த நாடு பாரதம் என்பதை, அமைதியான முறையில் ஏகமனதாக ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்துக் காட்டினோம். அப்படி ஓர் அதிசயத்தை நிகழ்த்திக் காட்டியவர் தலைவர் காமராஜ் அவர்கள்தான் என்பது உலகறிந்த உண்மை. இந்த நாட்டில் ஜனநாயகம் தடை பெறாமல் தொடர்ந்து நடைபெறும் என்பதை உலகத்துக்கு எடுத்துக்காட்டினார் காமராஜ்.

ரஷ்யப் பிரதமர் கோசிஜின் அவர்கள், டெல்லியில் காமராஜ் அவர்களைச் சந்தித்துத் தம் நாட்டுக்கு வருமாறு அழைத்தபோது, காமராஜ் அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டார்.

மாஸ்கோ செல்வதற்கு முதல் நாள் டெல்லியில் ஒரு விருந்து ஏற்பாடாகி இருந்தது. விருந்தளித்தவர் ரஷ்ய நாட்டின் இந்தியப் பிரதிநிதி. அதற்கு, யூகோஸ்லேவியா, பல்கேரியா, ஹங்கேரி, செக்கோஸ்லோவேகியா, கிழக்கு ஜெர்மனி ஆகிய நாட்டுப் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

அந்த விருந்தில் ரஷ்யப் பிரதிநிதி என்னிடம் 'காமராஜ் அவர்களுக்கு விசேஷ விருப்பம் ஏதாவது உண்டா? குறிப்பிட்ட 'பொழுதுபோக்கு' ஏதாவதில் அவர் அக்கறை கொண்டுள்ளாரா? ரஷ்யாவில் நாங்கள் ஏற்பாடு செய்துள்ளதைத் தவிர, அவர் ஏதாவது காண விரும்புகிறாரா?' என்று கேட்டார்.

நான் யோசித்துப் பார்த்தேன். காமராஜ் அவர்களுக்கு என்ன ஹாபி? என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. 'அவர் பொழுதெல்லாம் மக்களைப் பற்றிய சிந்தனையில்தான் போகிறது. எனவே மக்களின் நல்வாழ்வுதான்!' ரஷ்யப் பிரதிநிதி என் பதிலைக் கேட்டு வியப்படைந்தார்.

துஷான்பேயில் உள்ள ஒருகூட்டுப் பண்ணைக்கு விஜயம் செய்தார் காமராஜ்.

அங்கிருந்த சில தாய்மார்களைப் பார்த்து, நம் ஊர்ப் பெண்மணிகளை விசாரிப்பதுபோல் 'என்னம்மா, சௌக்கியமா?' என்று வினவினார் காமராஜ்.

அந்தப் பண்ணைவாசிகளுக்கு இந்திய நாட்டிலிருந்து வந்திருக்கும் பெரும் தலைவர் என்ற எண்ணம் மறந்து, 'நம் பண்ணையைச்சேர்ந்த ஒரு பெரியவரிடம்தான் நாம்பேசிக் கொண்டிருக்கிறோம்' என்ற உணர்வை ஏற்படுத்திவிட்டார் காமராஜ்.



# தேசத்தலைவர்

**ஜி. கருப்பையாமூப்பனார்**

புதிய தமிழகத்தின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட பெருந்தலைவர் காமராஜருடைய வரலாறு, தமிழகத்தின் அரசியல் வரலாற்றுக்கு ஒரு தனிப்பாதை காட்டியது.

பணம் படைத்தவர்கள், செல்வாக்கு மிகுந்தவர்கள், சாதிப் பெருமை பெற்றவர்கள் மட்டுமே அரசியலில் தலைமையேற்க முடியும், பதவிபெற முடியும் என்றிருந்த நிலையை மாற்றியமைத்தவர்.

எளிய தொண்டனாக, ஆர்வமுள்ள சுதந்திரப் போராட்ட வீரனாக காங்கிரஸ் இயக்கத்தில் இணைத்துக் கொண்ட அவர் தன்னுடைய சொந்தச் சேவையினால், உழைப்பினால் தலைமை நோக்கி நடைபோட்டவர்.

காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைமை அவரைத் தேடி வந்தது. மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பு எதிர்பாராத சூழ்நிலையில் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவருடைய 10 ஆண்டுக்கால ஆட்சி, தமிழகத்தின் பொற்காலம்.

அடித்தள மக்கள் சமுதாயத்தினுடைய அடித்தளத்தைத் தாங்கி நிற்கின்ற ஏழைகளும், நலிந்தவர்களும், பிற்படுத்தப்பட்டவர்களும், பின்தங்கியவர்களும், படிக்காதவர்களும், படிக்கும் துடிப்புப் பெற்றிருந்தவர்களும் காமராஜருடைய ஆட்சி, தங்கள் நலம் காக்கும் ஆட்சி எனக் கருதினர்.

மின்சாரம் கிராமங்களுக்குச் சென்றது. விவசாயத்தை வளர்த்தது; உணவு உற்பத்தியைப் பெருக்கியது. நாளுக்கொரு தொழிற்சாலை என மாநிலத்தினுடைய தொழில் துறை முன்னேற்றப் பாதையில் வேகமாக நடைபோட்டது. கல்விக் கூடங்களின் கதவுகள் அனைவருக்கும் திறந்து விடப்பட்டன. இலவசக் கல்வி, சீருடை எனப்பல திட்டங்கள் தமிழகத்தினுடைய கல்வித் தரத்தை உயர்த்தின.


பண்டித நேருவின் வேண்டுகோள் காமராஜரை டெல்லிக்கு ஈர்த்தது. அகில இந்திய காங்கிரசின் தலைவராகப் பொறுப்பேற்றவர் நாட்டின் ஜனநாயகத்திற்கும், தேசிய ஒருமைப்பாட்டிற்கும், சோசலிச சமுதாய அமைப்புக்கும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

இந்தியாவிற்கு அன்னை இந்திரா காந்தியின் தலைமையை அடையாளம் காட்டியவர், தமிழகத்தின் தன்னிகரற்ற தலைவர்தேசத்தலைவராக உயர்ந்து நின்றார். நாட்டின் பொருளாதார வளர்ச்சியில், உணவு உற்பத்தியில் அவர் காட்டியஆர்வம் சிறப்புக்கு உரியது.

இந்திய ஜனநாயகம் இன்றைக்கு அவராலே வாழ்கிறது. பாரதத்தின் பிரதமரை மூன்றுமுறை தேர்ந்தெடுக்கின்ற பெரும் பொறுப்பினை ஏற்றவர் அவர்.

தமிழகத்தின் செயல்பாட்டுத் திறமைக்குப் பெருமை தேடித்தந்த பெருந்தலைவர் அவர். இன்று அவரை நாம் போற்றுகின்றோம். அவர் வழி நடப்போம். நாட்டைக் காப்போம்!

# வாழிய வாழிய கைத்தொழில்கள்



நாமக்கல் கவிஞர்
வெ. இராமலிங்கம் பிள்ளை

கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்
எத்தொழில் எதுவும் தெரியாமல்
இருந்திடல் உனக்கே சரியாமோ?

உழவும் தொழிலும் இல்லாமல்
உலகில் ஒன்றும் செல்லாது
விழவும் கலையும் விருந்துகளும்
வேறுள இன்பமும் இருந்திடுமோ?

காட்டிலும் மேட்டிலும் களைப்போடு
கஷ்டப் படுவோர் உழைப்பின்றி
விட்டினில் சாதம் வெந்திடுமோ?
வேறெதும் உணவைத் தந்திடுமோ?

கொல்லரும் தச்சரும் கூடாமல்
கூடமும் மாடமும் விடாமோ?
கல்லடி சிற்பியும் தச்சருமே
காரியம் பலவினுக் கச்சாணி.

எந்திர வேலைகள் சிறந்திடவும்
ஏற்றவன் கைத்தொழில் தெரிந்தவனே!
மந்திரத் தால் எதும் வந்திடுமோ?
மனிதன் செய்ததே எந்திரமும்!

கைத்தொழில் தம்மைக் காத்திடுவோம்
கலகம் பற்பல தீர்த்திடுவோம்
பொய்த்தொழில் யாவும் குறைந்திடவே
பூமியில் நாமே சிறந்திடுவோம்.

ஏழை செல்வன் என்றுவரும்
எல்லாப் பிணக்கும் நின்றுவிடும்
வாழிய வாழிய கைத்தொழில்கள்
வாழிய நித்திய சத்தியமும்!





# பயணப் போர்ப் பரணி

நாமக்கல் கவிஞர்



"கத்தி யின்றி ரத்த மின்றி
யுத்த மொன்று வருகுது
சத்தி யத்தின் நித்தி யத்தை
நம்பும் யாரும் சேருவீர் (கத்தி)

ஒண்டி அண்டிக் குண்டு விட்டிங்
குயிர்ப றித்த லின்றியே
மண்ட லத்தில் கண்டி ராத
சண்டை யொன்று புதுமையே! (கத்தி)


குதிரை யில்லை யானை யில்லை
கொல்லும் ஆசை யில்லையே
எதிரி யென்று யாரு மில்லை
எற்றும் ஆசை யில்லதாய் (கத்தி)

கோப மில்லை தாப மில்லை
சாபங் கூறல் இல்லையே
பாப மான செய்கை யொன்றும்
பண்ணு மாசை யின்றியே (கத்தி)

கண்ட தில்லை கேட்ட தில்லை
சண்டை யிந்த மாதிரி
பண்டு செய்த புண்ணி யந்தான்
பலித்த தேநாம் பார்த்திட! (கத்தி)

காந்தி யென்ற் சாந்த மூர்த்தி
தேர்ந்து காட்டும் செந்நெறி
மாந்த ருக்குள் தீமை குன்ற
வாய்ந்த தெய்வ மார்க்கமே. (கத்தி)

[வேதாரணியம் உப்புச் சத்தியாக்கிரகிகள் தமது பாத யாத்திரையின்போது பாடிச் செல்வதற்காக, நாமக்கல் கவிஞர் வெ. இர்ாமலிங்கம் பிள்ளை அவர்கள் புதிதாகப் புனைந்து கொடுத்த பாடல்.]



# என் கணவர்- சில நினைவுகள்..

## சௌந்திரம் அம்மாள்

**நாமக்கல் கவிஞர் அவர்கள், தம் வாழ்நாளில் ஆற்றிய தொண்டுகள் குறித்தும், விடுதலைப் போரில் ஈடுபட்ட வரலாறு குறித்தும் அவரது துணைவியார் திருமதி சௌந்திரம் அம்மாள் எழுதி, 16.10.1987 'தமிழரசு' இதழில் வெளியிடப்பட்ட கட்டுரை இது. 4.10.1988 அன்று இயற்கையெய்திய திருமதி சௌந்திரம் அம்மாள் அவர்களை நினைவுகூரும் வகையில் மீண்டும் அக் கட்டுரை வெளியிடப்படுகிறது.**



என் கணவருக்கு 1909ஆம் ஆண்டு அவரது 21வது வயதிலே என்னுடைய அக்காள் முத்தம்மாளைத் திருமணம் முடித்து வைத்தனர். என் அக்காளின் திருமணத்துக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னமேயே என் சித்தப்பாவிற்கும் என் கணவரின் அக்காள் அவர்களுக்கும் கரூரில் மணம் ஆகியிருந்தது. அந்த உறவின் தொடர்பால் நாமக்கல்லில் அப்போது காவல்துறையில் 'ஏட்டாக'ப் பணியாற்றிப் போலீஸ் இன்ஸ்பெக்டராகவும் பதவி உயர்வு பெற்று நாமக்கல்லில் வாழ்ந்து வந்த வெங்கட்ராம பிள்ளையின் மூத்தமகனான ராமலிங்கம் பிள்ளைக்குத் தன் மூன்றாவது மகளான முத்தம்மாளைத் திருமணம் செய்து வைத்தார் என் தந்தை வீரப்பபிள்ளை.

கவிஞரின் தந்தையான வெங்கட்ராமபிள்ளை தன் மகனைத் தனது செல்வாக்கினால் எப்படியாவது போலீஸ் இலாகாவில் இன்ஸ்பெக்டராகச் சேர்க்க முயற்சித்தார். ஆனால் கவிஞருக்கு அந்த இளம் வயதிலேயே யாருக்கும் அடிமையாக வேலை புரிய விருப்பமில்லை; தனக்கு இயற்கையாகவே அமைந்திருந்த ஓவியத்திறமையை வளர்த்து, அதையே தொழிலாகவும் கொண்டார்.

என் கணவருக்கு என் அக்காளைத் திருமணம் முடித்தபின், பலவருடங்கள் அவர்களுக்குக் குழந்தையே இல்லை. இதனை என் கணவர் பெரிதாக எண்ணவில்லை. ஆனால், கவிஞரின் தந்தையோ தன் மகனுக்கு வாரிசு உருவாகவில்லையே என்பதை எண்ணி வருந்தி மறைமுகமாகக் கூறியதை அறிந்த முத்தம்மாள், தன் கணவரிடம் தனது தங்கையான என்னை மணம் செய்து கொள்ளுமாறு வற்புறுத்தினார். கரூருக்கு வந்து, தன் தந்தையிடம் என்னை இரண்டாம் தாரமாக கவிஞருக்கு மணம்செய்து கொடுக்கும்படி கூறினார். என் தந்தை ''எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை! உன் கணவர் சம்மதித்தால், உடனே நான் திருமணம் செய்விக்கின்றேன்'' என்று கூறினார். பின்னர் நாமக்கல்லிற்கு வந்து தன் கணவரிடம் தனது தங்கையான என்னைத் திருமணம் செய்துகொள்ளும்படி அடிக்கடி வற்புறுத்தினார். ''உங்களுக்குப் பிள்ளை இல்லாத குறையை என் தங்கை தீர்த்து வைப்பாள்! என் தந்தையும் அதற்குச் சம்மதித்து விட்டார்'' எனக் கூறினார். அப்போது

கவிஞர், ''எனக்குப் பிள்ளை வேண்டும் என்பது பெரிதல்ல, ஒருதாரம் இருக்கையில் மறுதாரம் மணம் புரிய மாட்டேன். இனி இதுபற்றி நீ எதுவும் பேசக் கூடாது'' என்று கண்டிப்புடன் கூறிவிட்டார்.

இப்படி அவர் கூறியதை அறிந்த என் தந்தை எனக்கு வேறு மாப்பிள்ளை பார்க்கும் முயற்சியில் ஈடுபட்டார். ஏற்கனவே பலர் என்னைத் திருமணம் பேச முற்பட்டபோதெல்லாம் கவிஞருக்கு இளையதாரமாக முடிக்கவேண்டும் என்று எண்ணிய என் தந்தை, ''இப்போது அவசரம் இல்லை. பிறகு பார்க்கலாம் என்று கூறி அனுப்பிவிட்டார். ஆனால் கவிஞரே நிச்சயம் 2ஆம் தாரம் மணம் செய்ய மாட்டேன்'' என்று கூறியதை அறிந்த என் தந்தை தனது உறவினரின் மகனான கும்பகோணத்தைச் சேர்ந்த டாக்டர் மாப்பிள்ளைக்கு நிச்சயதார்த்தம் செய்துவிட்டார். இதனை அறிந்த என் அக்காள் முத்தம்மாளின் மனம் மிக்க ஏமாற்றம் அடைந்தது. ஒருநாள் தன் கணவரிடம் ''அத்தான்! நான் இறந்துவிட்டால் இன்னொரு திருமணம் செய்து கொள்வீர்கள் அல்லவா?'' என்று கேட்டார். அவர் ''என்ன! பைத்தியம்போல் பேசுகிறாய்! பேசாமல் படுத்துத் தூங்கு'' என்று கூறிவிட்டார்!

ஆனால் விந்தையிலும் விந்தை! மறுநாள் மாலை திடீரென உடல் நலம்குன்றி முத்தம்மாள் வாந்தி எடுத்தார். மறுகணமே என் அக்காள் முத்தம்மாளின் உயிர் பிரிந்தது. அந்த நேரத்தில் என் கணவர் அருகில் இல்லை. நாமக்கல்லில் (இன்றும்) உள்ள 'விட்ரரி ஹால்' என்ற இடத்திற்கு அருகில் 'டென்னிஸ்' விளையாடிக் கொண்டிருந்தார். தன்மனைவி திடீரென இறந்த செய்தியை அறிந்து ஓடிவந்தார். தாங்க முடியாத துயரால் அவரது கண்களில் நீர் தாரைதாரையாகப் பெருகியது.

அவர் புகைப்பட நிபுணராக இருந்தும் அவரும் என் அக்காளும் சேர்ந்து எந்தப் புகைப்படமும் எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் அவர் என் அக்காள் முத்தம்மாளை மட்டும் படம் எடுத்திருந்தார். என் அக்காளின் இறுதிச்சடங்கு முடிந்தபின் பல உறவினர்கள் 2வது திருமணம்செய்துகொள்ளும்படி கவிஞரை வற்புறுத்தியபோது, ''என்மனைவி முத்தம்மாளைப் போன்ற ஒரு உத்தமப்பெண்ணை நான் இனிப் பார்க்க இயலாது. ஆனால் அவள் தனது தங்கை சௌந்திரத்தை என்னைத் திருமணம் செய்யச்சொல்லி வற்புறுத்தி வந்தாள். அந்த ஆசையை நிறைவேற்றலாம் என்றால் அதுவும் இயலாது. ஏனெனில் சௌந்திரத்துக்கு வேறு மாப்பிள்ளையை நிச்சயித்துவிட்டனர்'' என்றும் கூறினார்.



நாமக்கல் கவிஞரின் தந்தையார் வெங்கட்ராமபிள்ளை (கவிஞரே எடுத்த புகைப்படம் இது)

இதனை அறிந்த கவிஞரின் தந்தை வெங்கட்ராமபிள்ளை உடனே கரூர் சென்று கவிஞர்க்கு 2வது தாரமாக சௌந்திரத்தை மணம்செய்விக்க வேண்டும்என்று என் தந்தை வீரப்பபிள்ளையைப் பார்த்துக் கேட்டார்கள். அப்போது என் தந்தை, ''என் வாழ்வில் எப்போதும் சொன்ன சொல்லைக் காப்பாற்றி வருபவன் நான்; அப்படியிருக்க வேறு ஒருவருக்கு நிச்சயித்த சௌந்திரத்தை எப்படி 2வது தாரமாகத் திருமணம் செய்து தர இயலும்? சௌந்திரத்துக்குத் தங்கை இருந்தாலும் சமாளிக்கலாம். சௌந்திரம்தான் கடைசிமகள் என்பதையும் அறிவீர்கள்'' என்று கூறிவிட்டார்.

உடனே கவிஞரின் தந்தை தனது மகளையும் மருமகனையும் அழைத்துக்கொண்டு நேரே கும்பகோணம் சென்று, அவருக்கு உறவினரான டாக்டரின் தந்தையைப் பார்த்து நிலைமையைக் கூறினார். டாக்டரின் தந்தையும் டாக்டரும், ''கவிஞருக்குத் திருமணம் செய்விப்பதென்றால் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை'' என்று கூறிவிட்டனர். அதன்பின் வெங்கட்ராமபிள்ளை கரூர் சென்று என் தந்தையைச் சந்தித்து விவரம் கூறி என்னைக் கவிஞருக்கு இளையதாரமாக 1924ல் திருமணம் செய்வித்தார்கள்.

திருமணம் புரிந்த சில ஆண்டுகளில் எங்களுக்கு மகன் பிறந்தான். வெங்கட்ராமபிள்ளை தனக்குப் பேரன் பிறந்ததை எண்ணி மிக்க மகிழ்ச்சி கொண்டார். அவனுக்கு அமிர்தலிங்கம் என்று பெயர் வைத்தார். ஆனால் என் கணவரோ தனது முதல் மனைவியின் நினைவாக முத்துவேலு என்று பெயர் வைத்து ''முத்து!'' என்றே மகனை அழைத்து வந்தார்.



**கவிஞரின் முதல் மனைவி
முத்தம்மாள்
(இந்தப் புகைப்படமும் கவிஞரால் எடுக்கப்பட்டதுதான்)**

காரணம் என் அக்காள் முத்தம்மாவை ''முத்து'' என்றே கூப்பிடுவது அவரது வழக்கம்.

எனக்குத் திருமணம் ஆகும்போது அரசியலில் தீவிரமாக ஈடுபட்டு காங்கிரஸ் செயலாளராகப் பணிபுரிந்து வந்தார். என் கணவர்1930ஆம் ஆண்டு ராஜாஜியின் ஆணைப்படி உப்பு சத்தியாக்கிரகத்தின்போது ''கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது'' என்ற பாடலை எழுதி அது தமிழகம் எங்கும் முழங்கித் தமிழகத்தில் பாரதிக்குப் பிறகு ஒரு தேசியகவி என அறிமுகம் ஆனார்.

இந்தச் சமயத்தில் ஒரு நிகழ்ச்சியை இங்கே கூறுவது அவசியம் ஆகிறது. ஈரோட்டில் வாழ்ந்த பெரியார் ஈவெராவின் தந்தை தெய்வபக்தி மிகுந்தவர். கம்பராமாயணத்தில் மிக ஈடுபாடு உடையவர். கம்பராமாயணத்தை முறையாக திரு கோவிந்தராஜ ஐயங்கார் என்பவரிடம் கற்ற என் கணவர் அடிக்கடி ஈரோடு சென்று பெரியாரின் தந்தையிடம் கம்பராமாயணத்தின் முக்கிய பாடல்களைப் பாடி உரை கூறி மகிழ்வார். அப்போது பெரியார் ஈவெரா, என் கணவர் அவர்களைப் பார்த்து, ''என்ன கவிஞரே! நாட்டிற்குச் சுதந்திரத்துக்காகப் பாடுபடும் நாம் அதனை விடுத்து ராமாயணத்தைப் படித்துப் பொழுதை வீணாக்கலாமா?'' என்று கேட்பாராம். பெரியார் ஈவெரா அப்போது காங்கிரஸ்காரராக இருந்தாலும் தெய்வ நம்பிக்கை என்பது இல்லாதவர். ஆனால் அதனை வெளியே காட்டாமல் தன்தந்தை மனம் புண்படக்கூடாதென்று எதுவும் பேசமாட்டார். காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபட்டு, தீண்டாமை இயக்கத்தில் முக்கிய பங்கேற்று, 'கேரளா'வில் உள்ள வைக்கம் என்னும் ஊரில் ஹரிஜன மக்கள் கோவிலுக்குள் செல்லப் பெரிய போராட்டம் நடத்தியவர்.

அப்போதுதான் என் கணவர்,

**''தீண்டாமை என்கிற தீய வழக்கம்
தீரத்தொலைந்திட நாளாச்சு''**

என்ற பாடலைப் பாடினார்.

அப்போது என் கணவரும் ஈவெரா பெரியாரும் ராஜாஜியிடத்தில் மிகுந்த பற்றுக்கொண்டு அவரைத் தலைவராகக் கொண்டு பணிபுரிந்து வந்தனர். பின்னர் சில ஆண்டுகளில் ஈவெரா காங்கிரசிலிருந்து வெளியேறியபோது என் கணவர் ஈரோடு சென்று பெரியார் ஈவெராவைப் பார்த்து மீண்டும் காங்கிரசில் சேர்க்க முயற்சித்தார். அப்போது பெரியார் ஈவெரா''இனி அந்தப் பேச்சுக்கே இடம் இல்லை. சுதந்திரம் நாட்டுக்கு வாங்குமுன் நம் தமிழ்மக்களுக்குப் பகுத்தறிவை ஊட்ட வேண்டும். மூடப்பழக்க வழக்கங்களை ஒழிக்க வேண்டும். அதற்காகப் பாடுபடுகிறேன். நீங்களும் காங்கிரசிலிருந்து வெளியேறி என்னுடன் பகுத்தறிவு இயக்கத்துக்குப் பாடுபட வாருங்கள்'' என்று கூறினார்.

என் கணவர், ''தாங்கள் ஆரம்பிக்கும் இயக்கம் எப்போது வேண்டுமானாலும் ஆரம்பிக்கலாம்; ஆனால் மகாத்மா காந்தியைப்போல் ஒரு தலைவரை நம் வாழ்நாளில் பார்க்க முடியாது. காந்தியடிகள் வழியைப் பின்பற்றி என் வாழ்நாள் முழுதும் சுதந்திர இயக்கத்துக்காகப் பாடுபடுவேன்'' என்று கூறி நாமக்கல் திரும்பினார். அந்தச் சமயத்தில்தான்,

**''காந்தியைப் போல் தலைவர் -எந்தக்
காலத்தில் கிட்டுமடா?
வாய்ந்த தருணமிதை-நீ
வழுவி இழப்பாயோ!
நல்ல சமயமடா-இதை
நழுவ விடுவாயோ? ''**

என்ற பாடலைப் பாடினார்.

என்னைத் திருமணம் செய்தபின் கவிஞர், தமது ஓவியத் தொழிலை விட்டுவிட்டார். புகைப்படம் எடுக்கும் தொழிலையும் தன் தம்பியிடம் ஒப்படைத்துவிட்டார்.என் கணவரும், அவருடைய நெருங்கிய நண்பர் திரு என். நாகராஜ அய்யங்காரும் ராஜாஜியை அடிக்கடி சந்திப்பர். ராஜாஜி அப்போது நாமக்கல் அருகே புதுப்பாளையம் என்ற ஊரில் 'காந்தி ஆசிரமம்' ஒன்று அமைத்துக் கதர் நூலைப் பலரை நூற்கச்செய்து, கதர்த்துணி தயாரித்துச் சுற்றுப்புறங்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வந்தார். அப்போது கதர்ச்சேலையைப் பெண்கள் அணிவதில்லை. காரணம், அந்நாளில் தயாரான கதர்ப்புடவைகள் மிகவும் தடிப்பாக, சால்வையைப் போன்று இருக்கும். என் கணவர் அந்தக் கதர்ப்புடவைகளை எடுத்துக்கொண்டு காந்திஜியின் கொள்கைகளைப் பெண்களிடத்தில் விளக்கிக்கூறி, அவற்றை விற்றுவருமாறு எங்களுக்கு உத்தரவிட்டார். அதற்காக ஒரு பாடலும் எழுதிக் கொடுத்தார்.

**கதர்த்துணி வாங்கலையோ ஐயா அம்மா!
கதர்த்துணி வாங்கலையோ!
ஏழைகள் நூற்றது எளியவர் நெய்தது
கூழுமில்லாதவர் குறைபல தீர்ப்பது
கதர்த்துணி வாங்கலையோ**

என்ற அந்தப் பாடலைப் பாடிக்கொண்டே நானும்,திரு நாகராஜ ஐயங்கார் மனைவியும், நாமக்கல் சுதந்திரப்போராட்ட வீரர் திரு மருதப்பிள்ளையின் மனைவியும்,மற்றொரு மாபெரும் தியாகியான வரதராஜுலு முதலியாரின் மனைவியும், மற்றும் சில பெண்களும்கதர்ப்புடவைகளைச் சுமந்து கொண்டு, தெருத்தெருவாகச் சென்று விற்பனை செய்தோம். விவரம் தெரிந்ததுமுதல் காஞ்சிபுரம் பட்டுப்புடவையைத் தவிர மற்றப்புடவையை அணியாத பல பிரபலமானவர்களின் மனைவிகள் கதர்ப்புடவையை வாங்கியதுமின்றி, அதைக் கட்ட முடியாமல்-கட்டி நடக்கமுடியாதபடி நடந்து வந்த காட்சிகள் இன்றும் என் நினைவில் உள்ளன.

நாமக்கல்லுக்கு அனுப்பிய அவ்வளவு புடவைகளையும்

விற்றுவிட்டோம். அச்சமயம் ராஜாஜி நாமக்கல் வந்து எங்களைப் பாராட்டி மீண்டும் ஒரு மூட்டை அனுப்பி வைப்பதாகக் கூறினார். அப்போது நான் ராஜாஜியிடம் ''நீங்கள் எவ்வளவு அனுப்பினாலும் விற்றுத் தருகிறோம் ''என்று கூறினேன்.

ஆனால் இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் சில தினங்களிலேயே காந்தியடிகள் கள்ளுக்கடை மறியல் போராட்டத்தைத் துவக்க ஆணையிட்டார்.

'' குடிப்பதைத் தடுப்பதே
கோடிகோடி புண்ணியம்
அடிப்பினும் பொறுத்துநாம்
அன்புகொண்டு வெல்லுவோம்
பாடுபட்ட கூலியைப்
பறிக்கும் இந்தக்கள்ளினை
விடுவிட்டு நாடுவிட்டு
வெளியிலே துரத்துவோம் ''

என்ற மறியல் போராட்டப் பாடலை என்கணவர் இயற்றினார். ஏராளமானவர்கள் போராட்டத்தில் கலந்து சிறை சென்றனர்.

இப்படி நாமக்கல்லில் பலரும் கைதான பின்னே என் கணவரும் திரு நாகராஜ ஐயங்காரும் தலைமைதாங்கி 1932ஆம் ஆண்டு சத்யாக்கிரகப் போராட்டத்தில் இறங்கினர். அவர்கள் இருவரையும் தடியடிப் பிரயோகம் இன்றிக் கைது செய்தனர். காரணம் அன்று சேலத்திலிருந்து, அங்கு வந்திருந்த போலீஸ் உயர் அதிகாரி திரு ராகவச்சாரி என்பவர் என் கணவரையும் திரு நாகராஜ ஐயங்காரையும் நன்கு அறிந்தவர். இருவரையும் கைது செய்யும் போது, ''கவிஞர் அவர்களே! நாகராஜ ஐயங்கார் அவர்களே! உங்களைக் கைது செய்வதற்கு வருந்துகிறேன். ஆனால் என் கடமையைச் செய்கிறேன்'' என்று கூறினார். அதைக்கேட்ட என் கணவர், ''ஆம், நாங்கள் காந்திஜியின் கட்டளைப்படி எங்கள் கடமையைச் செய்யும்போது வெள்ளைக்கார கலெக்டர் கட்டளைப்படி உங்கள் கடமையை நீங்கள் செய்யத்தானே வேண்டும்!'' என்றார். பின்னர் அவர்களைச் சங்ககிரிக் கோர்ட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு இருவருக்கும் ஒரு ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இருவரையும் 'பி' வகுப்புக்கைதிகளாக நடத்தவும் உத்தரவிடப் பட்டது.

என் கணவர் சிறைசென்ற போது என் மூத்த மகனுக்கு வயது 6 இருக்கும். இளைய மகனுக்கு வயது 4. வருமானம் இன்றி அப்போது ஓராண்டுக் காலம் குடும்பம் நடத்த என் சகோதரர் ஆறுமுகம்பிள்ளை உதவினார். அவரும் தீவிர காங்கிரஸ்வாதி. ஆனாலும் என் கணவரின் ஆணைப்படி அவர் போராட்டத்தில் கலந்துகொள்ளாமல் வெளியே இருந்து வியாபாரத்தைச் (கரூரில்) செய்துவந்தார்.


1933ஆம் ஆண்டு என் கணவர் சிறையிலிருந்து விடுதலை ஆனார். அதன் பின்னர் மேலும் தீவிரமாக அரசியலில் ஈடுபடலானார். வேறுயாரிடமும் பண உதவி கேட்காமல் தன்வீட்டின் மேலும், தன் தோட்டத்தின்மேலும் கடன் வாங்கிச் செலவு செய்துவந்தார்.

அந்தச் சமயம் ராஜாஜியிடம் முன்னுரை வாங்கி, 'தேசியப் பாடல்கள்' என்ற தலைப்பில் சொந்தமாக ஒரு புத்தகம் வெளியிட்டார். அவற்றைப் பெரும்பாலும் எல்லாக் காங்கிரஸ் கூட்டங்களிலும் தொண்டர்கள் விற்றார்கள் என்றாலும், நூல்களில் பெரும்பகுதியைப் பலருக்கும் என்கணவர் இலவசமாகக் கொடுத்ததால் நட்டம் ஏற்பட்டது. பின்னர் புத்தகம் போடுவதை விட்டுவிட்டார்.

1943ஆம் ஆண்டு செட்டி நாட்டில் பள்ளத்தூர் என்ற ஊரிலிருந்து திரு அ.மு. வீரப்பா என்ற இளைஞர் எங்கள் வீட்டுக்கு வந்தார். என் கணவரின் நூல்களை வெளியிடப்போவதாகவும், அதற்கு அனுமதி தருமாறும் கேட்டார். என் கணவர் அனுமதி தந்தார். உடனே முன்பணமாக ஆயிரத்தை, பத்துநூறு ரூபாய் நோட்டுகளாக என் கணவரிடம் கொடுத்தார். பலநாட்களாக நூறுரூபாய் நோட்டைப் பார்க்க முடியாதிருந்த என் கணவர் மகிழ்ச்சியுடன் அவற்றைப் பெற்றுக் கொண்டார். அவர் பின்னும் தொடர்ந்து பணம் அனுப்பி உதவிவந்தார். அப்படியும் குடும்பச் செலவுக்குத் தான் வந்ததே தவிர, கடன்களை அடைக்க முடியவில்லை. அப்போது பள்ளத்தூரில் ஆரம்பித்த தமிழ்ப்பண்ணை என்ற பதிப்பகத்தைச் சென்னையில் மாற்றி, அதனுடைய பங்காளராக திரு சின்னஅண்ணாமலை சேர்ந்து,

**கவிஞர், மனைவியார் சௌந்திரம் அம்மாள், கடைசி மகன் ராஜா ஆகியோருடன் யோகாசன நிபுணர் வி.என். குமாரசாமி தம்பதியர்.**





துணைவியார் சௌந்திரம் அம்மாளுடன் கவிஞர்.

என் கணவரது நூல்கள் பலவற்றை வெளியிட்டார்.

திரு சின்ன அண்ணாமலையின் முயற்சியினால்தான் என் கணவர் 'சுய சரிதை' எழுதினார். 'என் கதை' என்றதலைப்பில் திருசின்ன அண்ணாமலை இந்நூலை வெளியிட்டார். என் கணவர் எழுதிய அவளும் அவனும், 'மலைக்கள்ளன், மாமன்மகள்; தமிழன் இதயம், சங்கொலி, காந்தி அஞ்சலி என்ற பல புத்தகங்களையும் அழகிய முறையில் வெளியிட்டார். அப்போது ஒரு சமயம் சின்ன அண்ணாமலை நாமக்கல் வந்தபோது என்கணவரைப் பார்த்து, ''இப்போது உங்கள் 'ராயல்டி' பணங்களைத் தவறாமல் அனுப்புகிறேனே! உங்கள் கடன்கள் அடைந்ததா?'' என்றார். அப்போது ''வீட்டுச் செலவுக்குத்தான் சரியாகப்போகிறது. கடன்களுக்கான வட்டியைக்கூட இன்னும் கட்டமுடியவில்லை'' என்றார் என் கணவர்.

அன்றே சின்ன அண்ணாமலை தேவகோட்டை சென்று, 1942ஆம் ஆண்டு சுதந்திரப்போராட்டத்தில் தன்னுடன் திருவாடானைச் சிறையில் இருந்த பெரிய பணக்காரர் ஆன தன் நண்பர் திருநாவுக்கரசு என்பவரிடம் என் கணவரின் கஷ்டங்களைக் கூறி, அவரது கடனை அடைக்குமாறு கேட்டுக்கொண்டார். திருநாவுக்கரசு சின்ன அண்ணாமலையுடன் கூடவே நாமக்கல் வந்து, வீட்டின் மேலிருந்த கடன், தோட்டத்தின் மீதிருந்த கடன் இரண்டும் சேர்ந்து சுமார் 5000 ரூபாயைக் கொடுத்து, என் கணவருக்கு இருந்த கடன் தொல்லையை இல்லாமல் செய்தார். ரூ. 5000 என்பது தற்போது பெரிய தொகையாக இல்லாது இருக்கலாம். ஆனால் அப்போது அதன் மதிப்பு, அளவு கடந்தது. அந்த வள்ளல் திருநாவுக்கரசுவை இப்போது எண்ணிப்பார்க்கிறேன்.

1945ஆம்ஆண்டு 'கல்கி' அவர்களின் அரிய முயற்சியால் ரூ.18 ஆயிரம் சேர்த்து திரு. ராஜாஜி தலைமையில் திரு காமராஜ் அவர்களால்என் கணவருக்கு நிதி வழங்கப்பட்டது. அதன்பின் திரு சதானந்த் என்பவரின்முயற்சியால் பெங்களூர்த் தமிழர்கள் நிதி சேர்த்து ரூ. 7000 அளித்துப் பாராட்டினார்கள். 1957ஆம் ஆண்டு யாழ்ப்பாணத் தமிழர்கள் என் கணவரை அழைத்து, வெள்ளியினாலும் தந்தத்தினாலும் ஆன பலவிதமான பரிசுகளைக் கொடுத்து ரூ. 25,000 பணமுடிப்பும் தந்து பாராட்டினார்கள். அப்போது ஈட்டிமரத்தில் இருபுறமும் வெள்ளி வேலைப்பாடுகளுடன் கூடிய ஒரு பெட்டியில் ஓலைச்சுவடிகளிலேயே அச்சிடப்பட்ட பாராட்டு மடலை அளித்தார்கள். நவாலியூர் சோமசுந்தரப்புலவர் என்பவரால் இயற்றப்பெற்று, யாழ்ப்பாணம் என்னும் ஊரில் அளிக்கப்பட்டது அந்தப் பஞ்சகம்.

ஒரு சமயம் 'கல்கி' தன் சொற்பொழிவில், ''இன்று பாரதிக்கு மண்டபம் கட்டுகிறோம். ஆயிரக்கணக்கில் செலவு செய்து விழாக் கொண்டாடுகிறோம். ஆனால் அன்று பாரதி வறுமையினால் வாடிப் பலநாள் பட்டினியாக இருந்தார் என்ற வரலாற்றைப் பார்க்கும்போது, இனி அவர் போன்ற எந்தக் கவிஞரையும் வறுமையால் வாடவிடக்கூடாது. அவரைப் பட்டினி போட்ட பாவத்திற்கு மன்னிப்புத் தேட நாமக்கல் கவிஞரை வாழவைக்க வேண்டும்'' என்று கூறினார்.

இப்படி என் கணவருக்கு உதவி செய்தவர்களை எண்ணும்போது நான் அவர்களுக்கெல்லாம் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என் கணவர் வறுமையிலிருந்து மீண்டாலும், உடல் நலக்குறைவால் அவதியுற்றதை அறிந்த சென்னையில் வாழ்ந்த யோகாசன நிபுணர் திரு வி.என். குமாரசாமி தன் வீட்டுக்கு என் கணவரை அழைத்துப் போய் அங்கேயே பல நாட்கள் தங்க வைத்து, பத்தியமான உணவுகளை அளித்து, எல்லாவித யோகாசனங்களையும் கற்றுக்



''தமிழ்நாட்டில் நாமக்கல் கவிஞரின் பேர் மூலை முடுக்குகளிலும் பரவியிருக்கிறது. பண்டிதர் பாமரர் யாவரும் அவரைப் பாராட்டுகின்றனர். அவர் பேருள்ள எந்த நூலும் எளிதில் ஏற்றுக் கொள்ளப்படும்''

—தமிழ்ப்பெரியார் திரு.வி.க.



கொடுத்தார். அங்கு இருந்தநாட்களிலேயே அவரது பலகீனம் குறைந்து ஓரளவு குணம் அடைந்தார். திரு குமாரசாமியும் அவரது மனைவியும் காட்டிய அன்பையும் உபசாரங்களையும் வார்த்தைகளால் கூறமுடியாது.

தொடர்ந்து 20 ஆண்டுகள் என் கணவர் ஆசனங்கள் செய்து வந்தார். முக்கியமாக 'சர்வாங்காசனம்', 'சிரசாசனம்' என்ற இரு ஆசனங்களை சுமார் 1 மணி நேரம் செய்வார். 1958ல் என் கணவருக்கு வயிற்றில் ஒரு அறுவைச் சிகிச்சை செய்தார்கள். அதன் பின் அவர் ஆசனம் செய்வதை டாக்டரின் யோசனைப்படி நிறுத்திவிட்டார்.

நாடு சுதந்திரம் அடைந்தபின் என் கணவருக்கு பல கௌரவங்கள் கிடைத்தன. 1948ஆம் ஆண்டு திரு குமாரசாமி ராஜா தமிழக முதல்வராக இருந்த போது என் கணவர் அரசவைக் கவிஞராக நியமிக்கப்பட்டார். அப்போது ஆளுநராக இருந்த பவநகர் மகாராஜா அவர்களால் பொன்னாடைபோர்த்தப்பெற்று ''ஆஸ்தான கவிஞர்'' என்று பொறிக்கப்பட்ட தங்கப்பதக்கத்தை அணிவித்தார்கள்.

பின்னர் திரு காமராஜர் முதல்வரானபோது, கவிஞர் அவர்கள் ஆளுநர் அவர்களால் எம்.எல்.சியாக நியமனம் செய்யப்பட்டார். திரு பக்தவத்சலம் தமிழக முதல்வரானபோது என் கணவரின் எம்எல்சி பதவி மீண்டும் ஒரு பருவத்திற்குத் தரப்பட்டது. 12 ஆண்டுகள் தொடர்ந்து எம்.எல்.சி ஆக இருந்தார் என் கணவர்.

அதன்பின் பேரறிஞர் அண்ணா முதல்வரான போது என் கணவருக்கு எம்.எல்.சி. பதவி தரப்படவில்லை என்றாலும், அவரது வாழ்நாள் முழுதும் உதவித்தொகையாக மாதம் ரு. 250 வழங்குவதற்குப் பேரறிஞர் அண்ணா உத்தரவிட்டார். என் கணவர் மறைந்ததும் உதவித்தொகை நிறுத்தப்பட்டது.

பின்னர் பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் முதல்வரானதும் என் கணவருக்கு அளித்து வந்த உதவித்தொகை ரூ. 250ஐ எனக்குத் தந்து உதவக் கட்டளை இட்டார்.

நாமக்கல்லில் ஆண்களுக்கான கலைக்கல்லூரி நிறுவிய பின்னர், பெண்களுக்காக நிறுவிய 'கலைக் கல்லூரிக்கு 'நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பெண்கள் கலைக் கல்லூரி'என்று பெயர் சூட்டினார்

1947ஆம் ஆண்டு கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் நாகர்கோவிலில் காந்தியடிகள் நினைவாக ஸ்தூபி ஒன்று நிறுவி அதனை அந்நாளைய முதல்வர் திரு குமாரசாமி ராஜா அவர்களைக்கொண்டு திறக்கச் செய்தார். அன்று மாலை 'காந்தி மகான் வில்லுப்பாட்டு' அரங்கேற்ற நிகழ்ச்சிக்கு என் கணவரைத் தலைமை வகிக்கச் செய்து, அவரது தலைமையில் பேரறிஞர் அண்ணாவைச் சொற்பொழிவு ஆற்றச் செய்தார். பேரறிஞர் அண்ணாவும் என் கணவரும் அன்று தான் நேருக்கு நேர் சந்தித்து அளவளாவினர். ''மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு'' என்று கூறிய பேரறிஞர் அண்ணா என் கணவருக்குச் சூட்டிய புகழ் மாலை என்றும் மறக்க முடியாது.

அன்று மாலை என்.எஸ்.கிருஷ்ணன், என் கணவரின் ஆப்த நண்பரான கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் இல்லத்துக்கு அழைத்துச்சென்றார். நானும் என் மூத்த மகனும், டி.ஏ. மதுரமும் உடன் சென்றோம். உடல் நலமின்றி, படுக்கையில் இருந்த கவிமணி, "நாமக்கல் கவிஞர் வந்துள்ளார்" என்று கேள்விப்பட்டதும் உணர்ச்சிவசப்பட்டுஎழுந்து, சுமார் இரண்டு மணி நேரம் உரையாடினார். அவருடைய சகோதரியின் மகன் திரு உமைதாணுவை அழைத்து எலுமிச்சைப் பழரசம் தரச்செய்து உபசரித்து அனுப்பினார்.

சுமார் 85 ஆண்டுகள் நிறைவான வாழ்வு வாழ்ந்த என் கணவர் காய்ச்சல் என்று ஒரு நாள் கூடப் படுத்ததில்லை. 1972 ஆகஸ்ட் 24ஆம் தேதி இரவு 3 மணிக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டு சில நிமிடங்களில் அவர் உயிர் பிரிந்தது. அவர் தன் வாழ்நாளில் கடைசியாக எழுதிய கவிதை 'தமிழரசு' இதழுக்கு எழுதியது. அந்தச்சிறப்புவாய்ந்த 'தமிழரசு' இதழில் என் கணவர் நாமக்கல் கவிஞரைக் குறித்து எனது உணர்வுகளை வெளியிட வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி எண்ணி மகிழ்கிறேன்.



**நாமக்கல் கவிஞர், அண்ணலை அமுதத் தமிழில் மட்டும் பாடவில்லை, அழகிய ஓவியமாகவும் தீட்டியுள்ளார்.**




"என்னுடைய பசுவை
இன்ஷூர் செய்ய நான்
மிகச்சிறிய தொகை
செலுத்தினேன்."

HTA 7025

## "அது இறந்துபோன போது, வேறொன்றை வாங்க யுனைடெட் இந்தியா உதவியது—விரைவாக !"

உங்கள் பகுதியில் உள்ள யுனைடெட் இந்தியா அலுவலகத்தையோ அல்லது ஏஜன்டையோ அணுகுங்கள். ஒரு கால்நடை இன்ஷூரன்ஸ் பாலிஸி எடுப்பது எவ்வளவு சுலபம் என்பதை தெரிந்து கொள்ளுங்கள். மேலும், அது எவ்வளவு செலவு குறைவு என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள்.
நோயினாலோ விபத்தினாலோ உங்கள் கால்நடை இறந்து போனால் உங்கள் இழப்பிற்கு யுனைடெட் இந்தியா ஈடு செய்யும் — விரைவாக.
உங்கள் குடும்பத்தின் நல்வாழ்வையோ அல்லது உங்களது நல்வாழ்வையோ விதியிடம் விட்டு விடாதீர்கள். உடனே யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ் பாலிசி எடுத்துக் கொள்ளுங்கள். முழு பாதுகாப்பு பெறுங்கள்.

யுனைடெட் இந்தியா கால்நடை இன்ஷூரன்ஸ் பாலிசி

**யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.**

(ஜெனரல் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியாவின் துணை நிறுவனம்)

தலைமை அலுவலகம்: 24 ஒயிட்ஸ் ரோடு, சென்னை 600 006.

இன்றே எங்களது 1000 க்கும் மேற்பட்ட அலுவலங்களில் ஏதாவது ஒன்றுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

FORTY YEARS OF FREEDOM



# முகத்தில் குறை போக்கலாம்!

முகம், மனிதருக்கு மனிதர் வேறுபடுகிறது.

எல்லோர் முகமும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. அதேபோல எல்லா முகமும் அழகாகவும் இருப்பதில்லை.

பிறவிலேயே சிலருக்கு முகக் குறைபாடுகள் ஏற்படலாம்; அல்



டாக்டர் சி.எஸ். ராமன்

லது விபத்தின் மூலமாகவும் ஏற்படலாம்.

இயற்கையாக ஏற்படும் உதடு ஊனம் போன்ற குறைபாடுகளால் முகம் விகாரமடைவது மட்டுமல்லாமல், அத்தகையவர்களால், சரியாகப் பேசவோ, சாப்பிடவோ முடிவதில்லை. அதுமட்டுமன்று, இக்குறைபாட்டால் அவர்கள் மனம் நோகவும் கூடும். சமுதாயத்தில் ஒதுக்கப்படுகின்ற நிலையும் வரலாம். இந்த நிலைமையிலிருந்து அவர்கள் விடுபட முடியுமா? முடியும். பல்வேறு துறை மருத்துவ நிபுணர்கள் முயன்றால் முடியாதது இல்லையே!

பிறவியிலேயே முகத்தில் குறைகள் ஏற்படுவதற்குக் காரணம் என்ன?

இதை விளக்கவும், அதனைப் போக்கும் வழிமுறைகள் காணவும் ''முகத்தின் பிறவிக் குறைகள்'' பற்றிய முதலாவது தேசிய மாநாடு செப்டம்பர் திங்கள் 24, 25 ஆகிய இரு நாட்கள் சென்னையில் நடந்தது. இம்மாநாட்டில், இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்து வந்த மருத்துவ நிபுணர்கள் கலந்து கொண்டார்கள்.

இந்திய மருத்துவக் கவுன்சில் தலைவர் டாக்டர் ஏ.கே.என். சின்ஹா மாநாட்டிற்குத் தலைமை வகித்தார்.

மாநாட்டில், மருத்துவம் குறித்த நூல் ஒன்றை, எம்.ஜி.ஆர். பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் லலிதா காமேஸ்வரன் வெளியிட்டார். அவர் பேசுகையில், ''சமூகத்தில் பிறவியிலேயே ஏற்படும் பல்வேறு குறைகளுக்குப் பல வகையான மருந்துகளே காரணமாக இருப்பதால், கருவுற்ற தாய்மார்களுக்கு மருந்து எழுதிக் கொடுக்கும் போது, மருத்துவர்கள் கவனமாக இருக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

மாநாட்டின் செயலாளரும், பல் மருத்துவத் துறைப் பேராசிரியருமான டாக்டர் ஜே.ஜி.கண்ணப்பன் பேசுகையில், ''பிறவியிலேயேமுகத்தில் ஏற்படும் குறைகளைக் களையும் பணியில் ஈடுபடும் மருத்துவர்களுக்கு ஊக்கம் அளிக்க, இருபதாயிரம் ரூபாய் நிதியுதவியில், ஒரு தனி அறக்கட்டளை உருவாக்கப்பட்டுள்ளது என்னும் மகிழ்ச்சியான செய்தியைக் கூறினார்.

தொடக்கத்தில் மாநாட்டுத் தலைவர் டாக்டர் ஜே.ஜி.சண்முகநாதன் அனைவரையும் வரவேற்றார். கோவை அவினாசிலிங்கம் மகளிர் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் ராஜம்மாள் பி. தேவதாஸ் விழா மலரை வெளியிட்டு, அறிவியல் கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார். அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வி. சி. குழந்தைசாமி கருத்தரங்கில் கலந்துகொண்டார்.




டாக்டர் ஜே. ஜி. கண்ணப்பன்

''தமிழகப் பல் மருத்துவத் தந்தை'' என்று அழைக்கப்படும் டாக்டர் சி.எஸ்.ராமன் அவர்கள், விழாவில் கௌரவிக்கப்பட்டார்.

டாக்டர் சி.எஸ்.ராமன் அவர்கள்




பல் மருத்துவத் துறையின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர். 84 வயதான அவர், இன்னும் நம்மிடையே வாழ்ந்து வருவது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். அன்னாரைப்பற்றிய கட்டுரை ஒன்று ,''தமிழரசு'' ஜுன் -1 இதழில் வெளிவந்த விவரத்தையும் மாநாட்டில் தெரிவித்தார், டாக்டர் ஜே.ஜி.கண்ணப்பன்.

அன்றைய மாநாடு, பிறவியிலேயே முகக் குறைபாடுகள் குறிப்பாக உதடு ஊனமுற்றவர்களின் உள்ளத்தில் உற்சாகத்தை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது. அதே சமயத்தில், மருத்துவ உலகில் ஒரு மகத்தான சாதனை நிகழவிருக்கிறது என்கிற உண்மையையும் வெளிச்சம் போட்டுக் காட்டியது.

—பி. வி. ஜி.

# படமும் செய்தியும்



சென்னையில் 22.9.88 அன்று நடைபெற்ற இந்திய ஆட்சிப்பணி அலுவலர்களின் துணைவியர் சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டத்தில், மேதகு ஆளுநரின் துணைவியார் திருமதி அக்கம்மா அலெக்சாண்டர் அவர்கள் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டு, அங்கு நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டார்.



அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாள் விழா மற்றும் கதர் விற்பனைத் துவக்க விழா 2.10.88 அன்று சென்னைக் குறளகம், காதிகிராப்டில் நடைபெற்றது. செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி, இ.ஆ.ப., தலைமை தாங்கினார். கைத்தறி மற்றும் கதர்த்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு மு. பரமசிவம், இ.ஆ.ப., கதர் விற்பனையைத் துவக்கி வைத்தார். திரு ஆ.கி. வெங்கிடசுப்பிரமணியன், இ.ஆ.ப., (திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை) கதர் விற்பனையில் சிறந்து விளங்கிய அலுவலர்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பரிசுகள் வழங்கினார்.



திருக்குறளார் வீ. முனிசாமி அவர்களின் பவள விழா 29-9-88 அன்று சென்னையில் நடந்தது. தமிழ் வளர்ச்சி உயர் நிலைக் குழுத் தலைவர் டாக்டா ம. பொ.சிவஞானம், முத்தமிழ்க்காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் முதலானோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத் தலைவர் திரு. சுகவனேசுவர், ஆளுநரின் ஆலோசகர் திரு பி.வி. இராமகிருஷ்ணா அவர்களிடம், ஆதாயப் பங்குத் தொகையாக ரூ. 54 இலட்சத்திற்குரிய காசோலையை 22.9.88 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார். திரு எச்.எம். பாண்டே, (நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்) மற்றும் எம்.ஏ. கௌரி சங்கர் (ஆலோசகரின் செயலர்) உடன் உள்ளனர்.



அண்ணல் காந்தியடிகளின் பிறந்தநாளையொட்டி 2.10.88 அன்று சென்னை காந்தி மண்டபத்தில் நடைபெற்ற விழாவில், மேதகு ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் ஆ. பத்மநாபன் அவர்கள் தலைமை உரையாற்றுகிறார். முன்னாள் மத்திய அமைச்சர்கள் திரு சி.சுப்பிரமணியம், திரு ஓ.வி. அளகேசன் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.



4-10-'88 அன்று சென்னையில காலமான நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் துணைவியார் உடலுக்கு மேதகு தமிழக ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் ஆ. பத்மநாபன் அவர்கள் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

## ஆளுநரின் இரண்டாவது கட்ட அறிவிப்பு

# தொழில் வளர்ச்சிக்குப் புதிய சலுகைகள்

# ரூ.15 கோடிக்கு வரிச் சலுகை



மாநிலத்தில் விரைவான தொழில் வளர்ச்சிக்குத் தமிழக அரசு 8.5.1988 அன்று பல சலுகைகளை அறிவித்தது. அதனால், மாநிலத்தில் தொழில்களும் வாணிபமும் பெருகியுள்ளன. எடுத்துக்காட்டாக, விற்பனைவரிச் சலுகைகள் அறிவிக்கப்பட்ட தொழில்களின் வாணிகம் நன்கு பெருகியுள்ளது. இந்த சலுகைகள் அறிவிக்கப்பட்ட இரண்டு மாதத்திற்குள்ளாகவே சில தொழில்களில் விற்பனை 25 சதவீதத்திலிருந்து 50 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. இதன்படி பார்த்தால், வரும் மாதங்களில் இந்த விற்பனை மேலும் கணிசமாகப் பெருகுமெனத் தெரிகிறது. இதனால் கணிசமான உற்பத்தி பெருகுவதோடு, இன்னும் அதிகமான பேருக்கு வேலை வாய்ப்பும் உருவாகும்.

இவ்விதமான சலுகைகளினால் ஏற்பட்ட முன்னேற்றத்தை அறிந்து அரசு இத்தகைய சலுகைகளை மேலும் அளிப்பதென்று முடிவு செய்தது. அதன்படி, தமிழகத் தொழில் வளர்ச்சிக்கும், வணிகப் பெருக்கத்துக்கும் உதவும் வகையில் ரூ 15 கோடி விற்பனைவரிச் சலுகைகளை இரண்டாவது கட்டமாக அரசு அறிவித்துள்ளது.

புதிய சலுகைகள் பின்வருமாறு:

1. மின்சக்தி

அ) சிறு தொழில்துறையில் புதிய மின் இணைப்புகள் கோரியுள்ள எல்லா விண்ணப்பதாரர்களுக்கும் மின் இணைப்பு கிடைக்கும் தோராய நாள், குறித்தகால வரையறைக்குள் அவர்களுக்குள் அறிவிக்கப்படும்.

ஆ) உயரழுத்த மின்சக்தி பெறும் தொழிற்சாலைகளுக்கு 1.4.83-லிருந்து 30.11.84க்குள் ஏதாவது ஒரு மூன்றுமாத கால அளவை எடுத்துக்கொண்டு, அக்கால அளவில் பயன்படுத்திய மின்சக்தியை அடிப்படையாக வைத்து, அத்தொழிற்சாலைகளுக்கு மின்பங்கீட்டளவு தற்போது கணக்கிடப்படுகிறது. அதிகம் மின்சக்தி பயன்படுத்திய உயரழுத்த தொழிற்சாலைகள், அதிக மின் பங்களவைப் பெறும் பொருட்டு, மின்பங்கீட்டளவு கணக்கிட அடிப்படைக்கால அளவு, 1·12·83லிருந்து 30·6·88க்குள், எந்தவொரு மூன்றுமாத அளவு தொழிற்சாலைகளுக்கு மிகவும் சாதகமாக் உள்ளதோ, அதை நிர்ணயிக்க இனி வகை செய்யப்படுகிறது. நலிவுற்ற தொழிற்சாலைகளுக்கு மின்பங்கீட்டு அளவைக் கணக்கிட 1.10.78 லிருந்து 30.6.88 வரை பத்தாண்டுக்கால அளவை அடிப்படை அளவாக எடுத்துக் கொள்ளலாம். இத்தகைய நீக்குபோக்குடைய சலுகைகளின் பயனாக தொழிற்சாலைகளின் உற்பத்தி அளவு அதிகரிக்கும் என்று நம்பப்படுகிறது.

இ) உயரழுத்த மின்சக்தியைப் பயன்படுத்துபவர்கள், மின்சக்தி பற்றாக்குறையின் காரணமாக மின் உற்பத்தி பொறிகளில் அதிகத் தொகையை முதலீடு செய்யவேண்டியுள்ளது. இந்தவகையில் இவர்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாட்டைக் களைய, புதிய மின் உற்பத்திப் பொறி வாங்கும்போது அப்போது செலுத்தப்படும் விற்பனை வரிக்குச் சமமான ஒரு தொகை

## தொழில்கள் பெருக ஏராள வாய்ப்புகள்

இவர்களுக்கு உதவித் தொகையாக வழங்கப்படும்.

## 2. தொழில் ஊக்க உதவிகள்

### முன்னோடித் தொழில்

தொழில் வளர்ச்சியில் பின்தங்கியுள்ள பகுதிகளில் பெரியதொழில் பிரிவுகளை அமைக்க ஊக்கம் அளிக்கும் நோக்குடன் முன்னோடித் தொழில் பிரிவுகளுக்குச் சிறப்புச் சலுகைத் திட்டமொன்றை அரசு கொண்டுவரும். அதன்படி,

அ) மாநில அரசிடமிருந்து-மத்திய அரசிடமிருந்து மூலதன உதவித் தொகை பெறுவதற்குத் தகுதி உடையவை என அறிவிக்கப்பட்ட வட்டங்களில் ரூபாய் ஐந்து கோடிக்கு மேற்பட்டு, நிலையான மூலதன முதலீட்டுடன் முதல் பிரிவாக அமைக்கப்படும்புதிய தொழில் பிரிவு. (1.10.88 அன்றுள்ளபடி அந்த வட்டங்களில் இப்படிப்பட்ட தொழில் பிரிவு எதுவும் இருந்திருக்கக்கூடாது). இத்தொழில் பிரிவுகள் தற்போது ரூ.15 இலட்சம் உதவித் தொகை பெறுவதற்குப் பதிலாக ரூ. 25 இலட்சம் மூலதன உதவித் தொகை பெறும்.

ஆ) அடுத்த 18 மாதங்களில் மாநிலத்தில் எங்கேனும் ரூ. 25 கோடிக்கு மேற்பட்டு நிலையான மூலதன முதலீட்டுடன் அமைக்கப்படும் புதிய தொழில் பிரிவுகளும், 1.10.88க்குப் பின்னர் ரூ. 25 கோடிக்கு மேற்பட்டு கூடுதலாக முதலீடு செய்து, விரிவுபடுத்தி, பல திறப்படுத்தியுள்ள தொழில் பிரிவுகளும், உயரளவான ரூ. 25 இலட்சம் முதலீட்டு உதவித்தொகையைப் பெறும்.

இவ்விரு வகை தொழில் பிரிவுகளுக்கும், வட்டியில்லாத விற்பனை வரி ஒத்திப்போடப்படும் விற்பனை வரிக்கடன் சலுகை வரம்பு,ஆறாண்டுக்கால அளவில் அதிகபட்சம் ரூ.2 கோடி வரை அளிக்கப்படும். ஆண்டு உச்சவரம்பு ரூ. 50 இலட்சமாக உயர்த்தப்படும். தற்போது இந்த சலுகைகளுக்கான வரம்புகள் ஆண்டுக்கு ரூ. 20 இலட்சமாகவும், மொத்தத்தில் ரூ. 1 கோடியாகவும் இருக்கின்றன.

### வட்டியில்லா விற்பனை வரிக்கடன் திட்டம்:

வட்டியில்லா விற்பனை வரிக் கடன் திட்டம், விற்பனை வரிவசூலில் ஒரு பகுதியை ஒத்தி வைக்தும், ஒரு பகுதி கடனாக வழங்கும் திட்டமாக ஏற்கெனவே மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இப்புதிய தொழில் பிரிவுகள், இததிட்டத்தின்கீழ் வழங்கப்படும் தொகையை முழு அளவில் பெறுகின்றவகையில் கடன் தொகைக்கான ஆண்டு வரையறை 20 இலட்சம் ரூபாயிலிருந்து 25 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும். மேல்வரி, கூடுதல் மேல்வரி ஆகியவற்றிற்கும் இச்சலுகைகள் விரிவாக்கப்படும்.

### மின்னணுத் தொழில்:

வெளிநாட்டு அல்லது உள்நாட்டு தொழில்நுட்ப உத்தியைப் பெறுவதற்கான ஊக்கம் அளிக்க, தொழில் முனைவோருக்கு-குறிப்பாகச் சில தொழில்துறை முனைவோருக்குக் கிடைக்கின்ற தொழில் நுட்ப வசதி அத்தகைய தொழில் நுட்பத் தகவுடைமை ஆகியலவ குறித்து ஆலோசனை வழங்கும் மின்னணுத் தொழில்நுட்ப வளர்ச்சி மையம் ஒன்றை 'எல்காட்' நிறுவனம் அமைக்கும். வணிகரீதியில் தொழில்களைத் தொடங்கக்கூடிய செயல்முறைக் கருத்துக்களை உருவாக்க தொழில்நுட்பத் தகுதி பெற்றோருக்கு ஆராய்ச்சி-வளர்ச்சி மானியம் வழங்கும் திட்டம் ஒன்றையும் இம்மையம் செயல்படுத்தத் தொடங்கும். சிறுதொழில் துறையில் ஆராய்ச்சி-வளர்ச்சிக்காக, கடன் உதவித்தொகை வழங்கு திட்டமொன்றைத் தொழில் துறையில் கொண்டுவந்துள்ள 'டிக்' நிறுவனத்துடன் இம்மையம் ஒருங்கிணைந்து செயல்படும்.

### தோல்பொருள் தொழில்:

தோல் பொருள் தொழிலின் வாய்ப்புக்களைக் கண்டறிந்து தூய்மைக்கேடற்ற தோல்பொருள் தொழிலின் துணைப்பிரிவுகளை அமைப்பது குறித்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. தோல் பொருள் தயாரிப்புத் தொழிலுக்கு மேற்கொண்டும் ஆதரவு அளிக்கும் நடவடிக்கையாக, தோல்பொருட்கள் தயாரிப்புத் தொழில் பிரிவுகளுக்குத் தற்போது வழங்கப்படுகிற மூலதன உதவித்தொகை 15·/. என்றும், உயரளவு ரூ. 15 இலட்சம் என்றும், வழங்கப்படுவதற்குப் பதிலாக,ரூ 20 இலட்ச உச்சவரம்புடன் 20·/. மூலதன உதவி வழங்கக்கருதப்பட்டுள்ளது.

## 3. சிறுதொழில்களுக்கான சிறப்புப் பணிகள்

அ) தொழில் தொடங்குவதற்கான அனைத்து நடைமுறைகளையும் ஓரிடத்திலேயே முடிக்க வகை செய்யும் மாவட்ட ஒருநிலைக் குறைதீர்வுக்குழுஏற்கெனவேமாற்றியமைக்கப்பட்டுள்ளது. மாவட்டத் தொழில் மையங்கள் செயல்படுவதை மேலும் மேம்படுத்தும் பொருட்டு, கட்டட வரைபட அனுமதி, தூய்மைக்கேடு கட்டுப்பாட்டு நடைமுறைகள், மின்அனுமதி ஆகியவற்றுக்கு மாவட்டத் தொழில் மைய வளாகத்திலேயே அவ்வப்போது அனுமதி அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

## தமிழ்நாடு அரசு சலுகை

கடந்த ஜூன், ஜூலை மாதங்களில் நடைபெற்ற அரசு ஊழியர், ஆசிரியர் போராட்டத்தின்போது, அனைத்து வேலை நாட்களிலும் பணியாற்றிய அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களுக்கு, அவர்கள் கடமையுணர்வுடன் பணிபுரிந்ததைப் போற்றும் வகையில், அவர்களுக்குக் கூடுதலாக 7 நாட்கள் ஈட்டிய விடுப்பு கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படும்.

இந்தச் சலுகை ரூ 1160-50-1460-70-1950 என்ற சம்பள விகிதத்தில் ஊதியம் பெறுகிறவர்களுக்கும், அதற்குக் கீழ் பெறுபவர்களுக்கும் இது பொருந்தும்.

மேலும், அலுவலர் பணிப்பதிவேட்டிலும், ரகசியக் கோப்பிலும் இது குறித்துத் தனிப்படப் பதியப்படும்.

—இவ்வாறு தமிழ்நாடு அரசு ஆணை தெரிவிக்கிறது.


**சிறுதொழில்களுக்குத் ''தடையேது மில்லை'' என்கிற அனுமதி**

ஆ) மொத்தம் ரூ.10 இலட்சத்திற்கும் குறைவான தொடக்க முதலீட்டுடன், பல சிறுதொழில்கள் உள்ளன. இத்தகைய சிறு அளவிலான சிறுதொழில் பிரிவுகளின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு அவற்றைத் தொடங்கு முன்னர், பல்வேறு முறைப்படுத்தும் அமைப்புகளிடமிருந்து முன் அனுமதி பெறவேண்டுமென்கிற முறை கைவிடப்படும். அதற்குப்பதிலாக தொழில் பிரிவுகள் தெரிவிப்பதன் பேரில், விதிகளுக்கிணங்க, முறைப்படுத்தும் அமைப்புகள் மின் அனுமதி வழங்கும். புதிய தொழில் பிரிவுகள் பதிவு செய்யப்படும் நிலையிலேயே, அரசின் ஒப்புதல் பெற்ற மண்டலத்தில் இடத்தைத் தெரிந்தெடுப்பது குறித்து ஆலோசனை வழங்குவது உட்பட, அவை கட்டுப்பட்டு நடக்கவேண்டிய பல்வேறு சட்டங்கள், விதிகளின் விதித்துறைகளைப் பொறுத்தமட்டில், மாவட்டத் தொழில் மையங்கள மேற்படி புதிய பிரிவுகளுக்கு உதவும். எனினும், தூய்மைக்கேடு கட்டுப்பாட்டு வாரியத்தால், பெருமளவு தூய்மைக்கேடு விளைவிக்கும் தொழில்கள், என்று வகைப்படுத்தப்படுகின்ற தொழில்களுக்கு, இத்தகைய தங்குதடையின்றி உடனே அனுமதி அளிக்கும் முறை பொருந்தாது.

**தனி முக்கியத்துவம் அளிக்கத் தக்க தொழில்கள்**

ஏற்கெனவே, உயரளவிற்கு ஊக்கமளிக்கப்பட்டுள்ள தொழில்களான மின்னணுவியல், தோல்பொருள் போன்ற தொழில்களுடன், ஆட்டோமொபைல் துணைக் கருவிகள் தயாரிப்பு, உணவுப் பொருள்களைப் பதப்படுத்துதல், மருந்து, மருந்துப் பொருட்கள் தயாரித்தல் போன்ற ஏனைய மூன்று தொழில்களுக்கும் தனி முக்கியத்துவம் அளிக்கக் கருதப்பட்டுள்ளது. மேற்சொன்ன தொழில்களின் வளர்ச்சிக்காகச் சிறப்பு ஊக்கம் அளிப்பதற்காக, இத்தொழில் தொகுதிகளில் வரும் புதிய சிறு தொழில் பிரிவுகளும் ரூ.10 இலட்சத்திற்குக் குறையாத அளவில் மூலதனச் செலவுடன் கணிசமான விரிவாக்கம், பல்திறப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளும் சிறுதொழில் பிரிவுகளும், ரூ.10 இலட்சம் என்ற உச்ச வரம்புக்குட்பட்டு மூலதன உதவித்தொகையாக 20 சதவீதம் பெறத் தகுதியுடையவையாகும். அப்பிரிவுகள் ஆண்டொன்றுக்கு ரூ. 5 இலட்சம் என்ற உச்சவரம்புடன், ரூ. 20 இலட்சம் வரையில் விற்பனை வரித் தொகையை ஒத்திவைப்பு கடன் சலுகையைச் செலுத்தும் தகுதி பெறுகின்றன.

**புதிய தொழில்நுட்ப உத்திகள் குறித்த ஆலோசனைகளை வழங்குவதன்மூலம் சிறுதொழில் பிரிவுகளுக்கு ஆதரவு அளித்தல்.**



ஈ) சிறுதொழில் துறையில் ஆராய்ச்சி-வளர்ச்சி நடவடிக்கைகளில் புதிய தொழில்நுட்ப உத்திகளைப் பின்பற்றவேண்டுமென்ற நோக்கத்தை ஊக்குவிப்பதற்காகத் தொழில் முனைவோரின் குறைந்த அளவுத் தொகையுடன், 10 சதவீதம் என்ற சலுகை வட்டி வீதத்திலும், தொழில்நுட்ப உத்தி பெறுவதற்கான உயரளவு உதவித் தொகை ரூ. 50,000-க்கு உட்பட்டு, தொழில்நுட்ப உத்தி பெறுவதற்கான செலவில் 25 சதவீத உதவித் தொகையுடனும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (டிக்) நிதி உதவி அளிக்கும்.

**ஒழுங்காகத் தொகை செலுத்துபவர்களுக்கு வட்டித் தள்ளுபடி**

உ) பாக்கித் தொகைகளை ஒழுங்காகச் செலுத்துவதன்பேரில், வட்டி வீதத்தில் ஒரு சதவீதத் தொகையை 'டிக்' நிறுவனம் குறைக்கும்.

## 4. பகுதி மேம்பாடு

அ) 'சிப்காட்' நிறுவனம் ஏற்படுத்திய தற்போதைய தொழில் வளாகங்களில் உள்ள அடிப்படை வசதிகள் பற்றி தலைமைச் செயலாளரின் தலைமையின் கீழ் உள்ள ஒரு கண்காணிப்பு நிலைக்குழு ஆய்வு செய்யும், தொழில் பிரிவுகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் அளிப்பதற்கு ஒருமித்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**புதிய தொழிற்பேட்டைகள்**

ஆ) சிப்காட் நிறுவனம், புதியதொரு மின்னணுப் பொருள் தொழிற்பேட்டையை ஒசூரில் நிறுவும்; அது தகுந்ததோர் இடத்தில் தோல்பொருள் தொழிற்பேட்டை ஒன்றையும் அமைக்கும்; வல்லுநர் குழுவொன்று அதற்கான இடத்தைத் தெரிந்தெடுக்கும்.

**தொழில்நுட்ப பரப்பு மையம்**

இ) பல்கலைக் கழகங்கள் ஆராய்ச்சி நிறுவனங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றிடையே ஓர் இணைப்பை ஏற்படுத்தும்பொருட்டு தொழில்நுட்பப் பரப்பு மையமொன்றை அரசு நிறுவும்; அந்த மையம் தொழில் நுட்ப வளர்ச்சி பற்றிய தகவல் அளிப்பதோடு, ஆராய்ச்சி-வளர்ச்சி, தொழில்நுட்ப மேம்பாடு ஆகியவை குறித்து சிறு தொழில் பிரிவுகள் அனைத்துக்கும் ஆலோசனையும் கூறும்.

## 5. பட்டுப்புழு வளர்ப்புத் தொழில்

இம்மாநிலத்தில் பெருமளவு வேலைவாய்ப்புச் சாத்தியமுள்ள பட்டுப்புழு வளர்ப்புத்தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு, அத்தொழிலுக்குக் கீழ்க்காணும் சலுகைகள் அளிக்கப்படும்.

அ) 'யூஜி ஈ' தொல்லையை ஒழிப்பதற்காக, நைலான் வலைகள் பாதிவிலைக்கு வழங்கப்படும்.

ஆ) இத்துறையின் மூலம் பயிற்சி பெற்ற பட்டுநூல் சுற்றும் ஒவ்வொருவருக்கும் பட்டுநூல் சுற்றும் 'இராட்டை' பாதி விலைக்கு விற்கப்படும்.

இ) தனியார் பட்டுநூல் சுற்றுபவர்களுக்குத் தேவையான நடைமுறை மூலதனத்திற்கு, வங்கிகள் மூலமாகவும், நிதியுதவி நிறுவனங்கள் மூலமாகவும் பட்டுப்புழு வளர்ப்புத்துறை இயக்குநர் ஏற்பாடு செய்வார். இதற்கான தொடக்க உதவித் தொகை, தமிழ்நாடு பட்டுத் தொழில் கூட்டமைப்பு மூலம் வழங்கப்படும்.

## 6. விற்பனை வரிச்சலுகை

1. தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின்கீழ் பின்வரும் சலுகைகளுக்கான அறிவிப்புகள் வெளியிடப்படும்.

அ) வர்த்தகப் பயனுக்கான வாகனங்கள், அடிச்சட்டங்கள் மீது கட்டப்பட்ட கூடுகள், இணைப்பு வண்டிகள், மோட்டார்வண்டி பாகங்கள், மற்றும் துணைப்பாகங்களுக்கான வரிவீதத்தைத் தற்போதைய அளவான 9 முதல் 15 வரையிலான சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகக் குறைத்தல்.

ஆ) மூலப்பொருள்கள், பாகங்கள் தொழில்படுபொருள்கள்(Processing materials) முதலியவற்றின் கொள்முதல்மீது 3(3) பிரிவின்கீழ் விதிக்கப்படும் சலுகை வீத வரியை 4 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாகக் குறைத்தல்.

இ) டிராக்டர்கள் மீதான விற்பனை வரியை 6 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாகக் குறைத்தல்.

ஈ) குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த துணித்தொழில் எந்திரங்களின் உதிரி பாகங்கள் மீதான

வரிவிதத்தை 8 சதவிதத்திலிருந்து 4 சதவிதமாகக் குறைத்தல்.

உ) ஈர தானிய அரைவைச் சாதனங்கள் (Wet grinders), வேறு சில வீட்டுப் பயன் சாதனங்கள் ஆகியவற்றிற்கான வரி விதத்தை 12 சதவிதத்திலிருந்து 8 சதவிதமாகக் குறைத்தல்.

ஊ) அலுமினியத்தாலான பாத்திரங்கள் மீதான வரிவைய 5சதவிதத்திலிருந்து 4 சதவிதமாகக் குறைத்தல்.

எ) ஒருமுனை வரி அடிப்படையில் இரும்பு அலமாரிகள் மீதான வரிவிதத்தை 15 சதவிதத்திலிருந்து 8 சதவிதமாகவும், அனைத்து வகையான மேசை, நாற்காலி போன்றவை மற்றும் அலுவலகச் சாதனங்கள் மீதான வரியை 10 சதவிதத்திலிருந்து 8 சதவிதமாகவும் குறைத்தல்.

ஏ) உயர் அடர்த்தி பாலிஎதிலீன் கோணிப் பைகளுக்கான வரி விதத்தை 5 சதவிதத்திலிருந்து 2 சதவிதமாகக் குறைத்தல்.

ஐ) குங்குமம் (தற்போது 5%)விற்பனைக்கு முழு வரிவிலக்கு அளித்தல்.

ஒ) விசைக் கலப்பைகளின் (தற்போது 6% விற்பனைக்கு முழு வரி விலக்கு அளித்தல்.

ஓ) பருத்தி உள்ளாடைகளுக்கான விற்பனை வரியை தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் 5 சதவிதத்திலிருந்து 3 சதவிதமாகவும், மத்திய பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் 2 சதவிதமாகவும் குறைத்தல்.

க) பருத்தி சிட்ட நூல்கண்டிற்கான விற்பனை வரியினை 3 சதவிதத்திலிருந்து 2 சதவிதமாகக் குறைத்தல்.

ச) அப்பளம், வடகம் போன்றவற்றிற்கான வரிவிலக்கு வரையறையினை ரூபாய் இரண்டு லட்சத்திலிருந்து மூன்று லட்சமாக உயர்த்துதல்.

ட) தையல், புத்தகம், சிட்பம் கட்டுதல், போன்ற பெருமளவு தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டுள்ள குறிப்பிட்ட பணி ஒப்பந்தங்களுக்கு வரிவிலக்கு அளித்தல்.

த) ஐந்தாவது விவர அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள இனங்களை மீண்டும் முதல் விவர அட்டவணையின்கீழ் கொண்டுவருவதன்மூலம் இரு முனைகளில் வரி விதிக்கும் முறையை மாற்றுதல்.

ப) சூட்கேஸ், பீங்கான், மண்பாண்டம் போன்ற சில இனங்கள் மீதான பலமுனை வரியை ஒருமுனை வரியாக மாற்றுதல்.

பின்வரும் சலுகைகளை வழங்க தமிழ்நாடு1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தை திருத்த வேண்டியது அவசியமாகும். இதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அ) கச்சாப் பொருட்கள் அல்லது இணைப்பு பாகங்களை வாங்கும் போது 3(3) பிரிவின்கீழ் சலுகைக் கட்டண வரிவிதிப்பைப் பயன்படுத்திய பின்னர், ஏனைய மாநிலங்களுக்கு கிளை மூலம் மாற்றம் அல்லது ஒட்டுமொத்த 'சரக்கு விற்பனை அடிப்படையில் அனுப்பப்படும் தயாரித்த பொருட்கள் மீது இரண்டு சதவித வரிவிதிப்பது தொடர்பான தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனைச் சட்டத்தின் 3(4) பிரிவினை நீக்குதல்.

ஆ) விவர அட்டவணையின் கீழ் வரும் பல்வேறு பணி ஒப்பந்தங்கள் மீதான விற்பனை வரி முறையில் விருப்பஅடிப்படையில் இரண்டு சதவிதம், 6 சதவிதமென ஒரு மொத்த கட்டணமாக மாற்றியமைத்தல் .

இ) புதிதாகத் தொடங்கப்படும் தொழிற்சாலைகள் விற்பனை வரி செலுத்துவதை ஒத்திவைக்கும் முறையில் செலுத்துவதற்கான சலுகையை அரசு முன்னர் அளித்துள்ளது. விற்பனை வரியுடன் மேல் வரி, கூடுதல் மேல்வரி ஆகியவற்றுக்கும் இச்சலுகை விரிவாக்கப்படுகிறது. இச்சலுகைக்கு வகை செய்யும் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்படும்.

ஈ) மேல் முறையீடுகள், வரி வழக்குகள், மறு விசாரணை மனுக்கள் ஆகியவற்றைத் தாக்கல் செய்வதில் ஏற்படும் தாமதத்தைப் பொருட்படுத்தாமல் இருப்பதற்கால கால வரையறையை நீட்டித்தல்.

உ) ஒருமுனை வரிவிதிப்பிலிருந்து பல்முனை வரிவிதிப்புக்கு மாற்றப்படுகையில் வரி செலுத்தும்போது வணிகர்கள் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளைக் களைதல். ●

## பார்த்தோம்-படித்தோம்!

16-9-88 தமிழரசு இதழ் கண்டேன். அதில் சென்னை உயர்நீதி மன்றத்தின வரலாறு பற்றியும், முதல் இந்திய நீதிபதியாகப் பதவியில் அமர்ந்த திருவாரூர் முத்துசாமி அய்யர் பற்றியும் கண்டதும் என் உள்ளம் பூரித்தது.

—எஸ்.வி.சந்தானராஜகோபால்
களப்பால்

இந்த இதழில், தலைமைச் செயலர் பேட்டி, அரசின் பணிகளை அறிய முடிந்தது.

—டி. வசந்தா,
கீழப்பழுவூர்.

'எளிமையின் திருவுரு அண்ணா' 'இனியர் அண்ணா' இவைகளைத் திரட்டித் தந்த தமிழரசு வாழ்க. எல். ஐ. சி. சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், வ.உ.சி. இலக்கியப் பணிகள் ஆகியவை பயனுள்ளவை.

— ஆர். துரைராஜு,
கீழப்பழுவூர்.

உயர்நீதிமன்றத்தின் வரலாறு, பெரியாரின் பெருமை, நெஞ்சிக்கினிய அண்ணா, வ.உ.சி. அவர்களின் இலக்கியப் பணிகள் இத்தனையும் தாங்கி எங்கள் இதயத்தைக் குளிர வைத்துவிட்டது.

—ஆர். அத்தியப்பன்,
பாச்சல்

பெரியார், அண்ணா, வ.உ.சி., பந்த் என்று திராவிடப் பாரம்பரியத்தையும், தேசியப் பாரம்பரியத்தையும் ஒரு சேரக் கண்டோம்-

—வி. சுப்பையன்,
செட்டிக்குறிச்சி.

'அவர்தான் பெரியார்' 'எளிமையின் திருவுரு அண்ணா' போன்ற கட்டுரைகள் அருமை.

—கே. யுகராஜ்குமார்,
மாவலிப்பட்டி.

வ.உ.சி.யின் இலக்கியப் பணிகள் பற்றிய கட்டுரை. என்னை மெய்சிலிர்க்க வைத்தது

—கே. செந்தில்குமார்,
மாவலிப்பட்டி.

விடுதலைக்குப் பாடுபட்ட பண்டித நேரு அவர்களின் இதயத்தில் இடம் பெற்ற கோவிந்த வல்லப பந்தின் வாழ்க்கைக் குறிப்பையும், வ.உ.சி.யின் இலக்கியப் பணிகளையும் தொகுத்து வெளியிட்ட 'தமிழரசு' இதழுக்கு நன்றி.

— ப. ரமேஷ் சம்பத், வந்தவாசி.

வ.உ.சி. யின் இலக்கியப்பணிகள் கட்டுரை வ.உ.சி.யைப் பற்றி விவரமாகத் தெரிந்த கொள்ள முடிந்தது. வ.உ.சி. யின் நூல்கள் தொகுப்பும், படங்களும் அருமை.

— எம். குமார்,
பேதாதம்பட்டி புதூர்.

தமிழறிஞர் வரலாறுகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருவதற்கு நன்றி. புதிய தலைமுறையினர் அவர்களைப் பற்றி அறிய இது உதவும். (எடுத்துக்காட்டு : பெரும் பேராசிரியர் சஞ்சீவி, வ.உ.சி.) செய்திப் படங்கள் கண்களுக்கு விருந்து.

—மு.ச. சர்புதீன்,
பரளி மின் நிலையம்.

# "நாக்குப் பூச்சிகளை ஒழிக்க எல்லா வழிகளையும் பார்த்துட்டேன். கடைசீயிலே எங்க கால்நடை மருத்துவர் கொடுத்த பன்மின்த்* தான் பலிச்சுது...பால் நஷ்டம் தராமலே!"



கறவைப் பிராணி உலகுக்கு நல்ல சேதி!

தன்னிகரற்ற

# பன்மின்த்*

(மொரண்ட்டெல் டிட்ரேட்)

## நாக்குப் பூச்சிகளை அழிக்கிறது, பாலைக் காப்பாற்றுகிறது.

''பாழும் நாக்குப் பூச்சிகளால்—அம்மம்ம, நான் பட்டபாடு: பலவீனம் பசியிராது, கறந்த பாலும் குறைவு. பிறகு, எங்க கால்நடை மருத்துவர் தந்த பன்மின்த் தான் பலிச்சுது—அதுவும் ஒரே ஒரு டோஸ்லே!''

**பால் இழப்பே இல்லை.**

''அருமையான சேதி—எங்க மாதிரி எல்லாக் கறவைகளுக்கும், சினைப் பிராணிகளுக்கும் கூட பத்திரமான மருந்து பன்மின்த். மற்ற மருந்துகளைப் போல் இல்லாமல், பன்மின்த் உபயோகித்த பிராணிகளின் பால், மனிதருக்குக் கெடுதலே இல்லை—நூற்றுக்கு 100 பத்திரமானது.''

**சினைக் காலத்தில் எந்த சமயத்திலும் தீங்கற்றது.**

''என் தங்கச்சி—பிள்ளைத் தாய்ச்சி—அவளுக்கு ஒத்துக்குமான்னு கவலைப்பட்டேன். ஆனால் பன்மின்த் சினைக் காலம் முழுக்க எந்தக் கெடுதலும் செய்யலை, ஏன், பலவீனக் காலங்களிலே கூட பாதிக்கலை. பக்க விளைவுகளே கிடையாது. குணமானதும் ஆறுதலான சுகம்!''

**வசதி மிக்கதும் கூட.**

''சாப்பிட வெகு இலகு பன்மின்த். ஊட்டிவிடுங்க ஒரு குளிகை (எங்க மாதிரி பெரிய பசு எருமைகளுக்கு இரண்டு), உடம்பு சுகமாயிடுது! ஆடு, கன்று மாதிரி சின்னப் பிராணிகளுக்கு மாத்திரையா வருது. சாப்பிடத் தயாரான கரைசலாகவும் கிடைக்குது. வேறென்ன வேணும் நம்மவர்களுக்கு!''

பால் இழப்பே இராது
பன்மின்த்*
விளைவை ஈடு செய்வது

காலநடை மருத்துவரிடம் பெறுவீர் சிறந்த மருந்து.

**பன்மின்த்***

புழுக்களைக் கொல்லும்! ஆரோக்கியத்தை வெல்லும்!

LINTAS BMT 2 2217 TM

*யூ.எஸ்.ஏ. ஃபைஸர் இன்க்.நிறுவன டிரேடு மார்க்.

pfizer

மேலும் விவரமறிய, எழுதுவீர் இம் முகவரிக்கு:
ஃபைஸர் லிட்., பி.ஓ. பாக்ஸ் நம்பர் 11602, பம்பாய் 400 021.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
100 சதவிகிதம் அசல் பட்டு
மற்றும் தங்க சரிகைகளைக்
கொண்டு நெசவு செய்யப்பட்ட
புதுமையான
பட்டுச்சேலைகளை
கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.
இந்தியாவின் மிகப்பெரிய
கைத்தறி கூட்டுறவு விற்பனை
நிறுவனம் கோ-ஆப்டெக்ஸ்.
அதற்குச் சொந்தமான
560 விற்பனைக்கூடங்கள்
மூலமாக கோடிக்கணக்கான
வாடிக்கையாளர்களின்
தேவைகளை பூர்த்தி செய்கிறது
DIPR: Efficient

பதிவு எண் : M. 8676
Licence No. TN/MS(C)/PP-23





நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை

நூற்றாண்டு நிறைவு

தோற்றம் :
19-10-1888

மறைவு :
24-8-1972